விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 01 வெள்ளிக்கிழமை (15.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# ஐ.நா. சபையுடன் இணைந்து

# இலங்கை செயற்பட வேண்டும்

## பான் கீ மூன் வலியுறுத்தல்



(வாஷிங்டன்)

உண்மைகளைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படவேண்டும் என ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கலந்து கொள்ளாத ஊடகவியலாளர்கள் சந்திப்பு

### ஏன் எனக் கேள்வி எழுப்பிய ஆசிரியர்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இலங்கையின் பிரதான ஊடகவியலாளர்களுடனான சந்திப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தவிர்த்துக்கொண்டார். ஏன் அவர் அவ்வாறு தவிர்த்துக் கொண்டார் என்ற கேள்வியை பத்திரிகை ஆசிரியர்கள் எழுப்பியுள்ளார்கள்.

ஜனாதிபதிக்கு பதிலாக ஜனாதிபதியின் செயலாளரே இறுதியில் இந்தச் சந்திப்பில் பங்குகொண்டு ஊடகவியலாளர்களுடன் பேசியுள்ளார்.

விசேட கலந்துரையாடல் என ஊடக நிறுவன பிரதம ஆசிரியர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்து ஒன்றரை மணித்தியாலம் காக்கவைத்து ஜனாதிபதியின் லண்டன் பயணம் வெற்றியளித்தது என ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பிரித்தானியாவுக்கான உயர்ஸ்தானிகர், (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான எதிர்க் கட்சி!

### கூட்டணி தேவையில்லை என்கிறார் கமகே

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான எதிர்க் கட்சி. அது கூட்டணி அமைப்பதற்காக ஏனைய கட்சிகளின் பின்னால் செல்லாது எனவும் ஐ.தே.க. தேசிய அமைப்பாளர் தயா கமகே கூறியுள்ளார்.

நாமே இந்த நாட்டின் பிரதான எதிர்க் கட்சி. எனவே பொதுக் கூட்டணிகளை அமைப்பதில் நாமே பிரதான பங்காளராக இருக்க வேண்டும். மாறாக, சரத் பொன்சேகாவினுடையதைப் போன்ற புதிய கட்சிகளின் பின்னால் நாம் செல்லக் கூடாது என அவர் கூறினார்.

சரத் பொன்சேகாவின் அரசியல் கூட்டங்களில் பங்குபற்றவோ கூட்டங்களை ஏற்பாடு செய்யவோ வேண்டாம் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கேபண்டாரவுக்குதான் அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு கட்சிகளை இணைக்க அரசு முயற்சி

(கொழும்பு)


அரசியல் தீர்வுகாண்பதற்காக நிறுவப்படவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சியினரையும் அழைத்து வருவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைபேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

13ஆவது திருத்தச்சட்டம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் அரசியல் கட்சியினருக்கும் வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இவை தொடர்பிலும் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எட்டப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக அரசாங்கம் சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளது. அதற்கான முயற்சியே இந்த நாடாளுமன்றத் தெரிவுக் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துக்கு எதிராக போராட எதிர்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

### சரத் பொன்சேகா அழைப்பு



(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், 13-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்தல் மற்றும் வடக்குக் கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்களே தமது முதற்கட்டமான அரசியல் இலக்குகளாக உள்ளன என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

பொது எதிரணியுடன் இணைந்து தனது புதிய அரசியல் பயணத்தை அதிரடியாக ஆரம்பிக்கப் போவதாக (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆயரைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர்

(மன்னார்)

அரச கட்டமைப்பினாலும், இனவாதிகளினாலும் அழுத்தங்களைச் சந்தித்துள்ள, மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராஜப்பு ஜோசப்பு ஆண்டகையை அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் சந்தித்துள்ளார்.

இலங்கைக்கான தனது பணியினை முடித்துக்கொண்டு அமெரிக்காவுக்கு செல்லவுள்ள நிலையில், இதன் நிமிர்த்தமாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக ஆயர் இல்ல வட்டாரங்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தக் கோரினார் கமரூன்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விரிவாகக் கேட்டறிந்தாரென பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் டாக்டர் கிறிஸ் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஆசிரியர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளருக்குமிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே உயர்ஸ்தானிகர் நோனிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இச்சந்திப்பில் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதி (20ஆம் பக்கம் பார்க்க)


## நில அபகரிப்புக்கு எதிராக திங்களன்று யாழில் ஆர்ப்பாட்டம்

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு

(கொழும்பு)

அரச இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனநாய வழியிலான எதிர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளது.

இப் போராட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணி தொடக்கம் இரண்டு மணிவரை யாழ்.நகர பேருந்து நிலையத்திற்கு முன்பாகவுள்ள சோமசுந்தரப் புலவர் சிலை அருகில் நடைபெறவுள்ளதாக தமிழ்த் (20ஆம் பக்கம் பார்க்க)



கல்யாணமாலை சர்வதேச இலவச திருமண சேவை நேற்று இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் நயினை எஸ்.சோமேஸ்வரம்பிள்ளை தம்பதிகள் மங்கல விளக்கேற்றுவதையும் சமாதான நீதவான் ஆர்.இரட்ணசபாபதி அலுவலகத்தை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

## அலங்கார உற்சவம்

(கொடிகாமம்)

கொடிகாமம் வெள்ளாம்போக்கடி மருதடிப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 12-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் இவ் அலங்கார உற்சவத்தில் இறுதிநாளான எதிர்வரும் 21-ம் திகதி 1008 சங்காபிஷேகமும் விசேட பூசைகளும் இடம்பெற்று விநாயகப் பெருமான் வெளிவீதியுலா வலம் வருவார். (எ)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




10.30, 2.30, 6.30, 9.30


## விண்ணப்பம் கோரல்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந் திய நிலையத்தினால் ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலில் சான்றிதழ்/ உயர்தர சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்திகளை உடையோர் சான்றிதழ் கற்கைநெறிக்கும் பலகலைக்கழகம் ஒன்றில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்லது க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்திகளை உடையோர் உயர்தர சான்றிதழ் கற்கைநெறிக்கும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ் பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.(எ)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யூனியன் அஷ்யூரன்ஸின் யூனியன் நாளை முன்னிட்டு டெங்கை இல்லாது ஒழித்து நோயற்ற சூழலைக் கட்டி எழுப்பும் முகமாக சிரமதான நடவடிக்கைகளை இன்று யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரியில் காலை 9 மணிதொடக்கம் 11 மணி வரை யூனியன் அஷ்சூரன்ஸ் பணியாளர்கள் மேற் கொள்ளவுள்ளார்கள். (எ-11)

## மறுக்க முடியாத கோரிக்கையால் அரசியலில் ஈடுபட கோத்தா இணக்கம்

(கொழும்பு)

பகிரங்கமாக அரசியலில் நுழைவதற்கு இணக்கம் தெரி வித்துள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தமக்கு களனி தொகுதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவி வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அரசு உட்தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அரசியலில் ஈடுபடுவதற்கு கடந்த காலங்களில் மறுத்துவந்த பாகாப்புச் செயலாளர், ஜனாதிபதியினதும் ஜனாதிபதி பாரியாரதும் ஜனாதிபதியின் மகன்மார் மூவரதும் மறுக்க முடியாத வேண்டுகோளுக்கமைய அரசியலில் பகிரங்கமாக ஈடுபடத் தீர்மானித்துள்ளார்.

அடுத்த அமைச்சரவை மாற்றத்தின்போது பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவியை வழங்க தீர்மானித்துள்ள ஜனாதிபதி, அதற்கு முன்னர் அவரை. தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவர எதிர்பார்த்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவிற்கு களனி தொகுதியின் அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டால், தற்போது கம்பஹா மாவட்டத் தலைவரான பசில் ராஜபக்ஷவை கிழக்கு மாகாணத்தின் கூட்டமைப்பின் தலைவராக நியமிக்கத் திட்டமிட்டுள்ளார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்திய அரசாங்கத்துடன் நெருக்கமாகச் செயற்படுவதுடன் வடக்கு-கிழக்கின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருவதால் கிழக்கு மாகாண கூட்டமைப்புத் தலைவராக பணியமர்த்துவது பொருத்தமானதாக இருக்கும் என ஜனாதிபதி அவருக்கு நெருக்கமான சிலரிடம் கண்டி ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தில் வை[illegible] தெரிவித்துள்ளதாகதகவல்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து அமைச்சரும், களனி தொகுதியின் அமைப்பாளருமான மேர்வின் சில்வாவின் இணைப்புச் செயலாளர் கூறுகையில்,

பாதுகாப்புச் செயலாளர் கடந்த சில மாதங்களாக களனி தொகுதிப் பணிகளில் தேவையற்ற விதத்தில் தலையிட்டு வந்ததாகக் குறிப்பிட்டார். எனினும், பாதுகாப்புச் செயலாளர் களனி தொகுதியின் அமைப்பாளராக நியமனம் பெறுவார் என்பது குறித்து எதுவும் இதுவரை அறியவில்லை எனக் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், களனி பிரதேசசபை உறுப்பினர்களை அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராக தூண்டிவிட்டது பாதுகாப்புச் செயலாளர்தான் எனவும், அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு நெருக்கமான சிலரை வெள்ளைவானில் கடத்தியமை, இன்னும் இருவர் கொலை செய்யப்பட்டமை ஆகிய சம்பவங்களுடன் பாதுகாப்புச் செயல[illegible] நேரடி தொடர்பிருப்பது உறுதியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## 2013 BIOLOGY EXAM MARKS LIST - 12

| இல. | பெயர் | புள்ளி | பாடசாலை |
|---|---|---|---|
| 01 | நினுஜா தயாபரன் | 94 | J.V.G.H.S |
| 02 | பிரியந்தினி சத்தியசீலன் | 90 | J.V.G.H.S |
| 03 | தாரணி கோகழிநாதன் | 88 | J.V.G.H.S |
| 04 | யோகராசா சாளுஜன் | 88 | J.H.C |
| 05 | ஆன்நிரோஜினி யூட்செல்வகுமார் | 88 | J.C.G.C |
| 06 | பழனிவேல் லக்ஸ்மன் | 88 | J.H.C |
| 07 | கருணாகரன் பிரணவன் | 88 | J.K.H.C |
| 08 | பிரியதர்சினி இரத்தினசிங்கம் | 86 | J.U.G.C |
| 09 | சோதிதாஸன் வெண்ணிலவன் | 86 | J.H.C |
| 10 | இராஜேந்திரன் கஜானன் | 86 | J.H.C |
| 11 | சோபிதா சிவேஸ்வரன் | 86 | J.V.G.H.S |
| 12 | ஜெயக்குமார் அமிர்தன் | 86 | J.H.C |
| 13 | யாழினி சிவலட்சணம் | 82 | J.V.G.H.S |
| 14 | கெங்காதரன் தஜீவன் | 82 | J.C.C |
| 15 | மோனிஷா ரோபேட் | 82 | J.V.G.H.S |
| 16 | சற்குணம் சிறிபவன் | 82 | J.S.P.C |
| 17 | மனோகரதாஸ் மிதூன்பரிசித் | 82 | J.S.P.C |
| 18 | ப்ாலச்சந்திரன் முரளிதரன் | 78 | J.H.C |
| 19 | சிவராஜி சிவசுப்பிரமணியம் | 78 | J.V.G.H.S |
| 20 | ஷம்யா சிவானந்தன் | 76 | J.V.G.H.S |
| 21 | பென்சி டொன்போஸ்கோ | 76 | M.P.C.C |
| 22 | சிவாஜினி ராஜேஸ்வரன் | 76 | J.H.L.C |
| 23 | ஆதிரை பத்மநாதன் | 76 | J.V.G.H.S |
| 24 | நவரத்தினராஜ் கஜந்தன் | 76 | J.K.H.C |
| 25 | கோஜியா திருலோகநாதன் | 76 | J.V.G.H.S |


Science Corner Jaffna | Science Point Jaffna | உயிரியல் பூங்கா மானிப்பாய்

**2014 Biology Class Time**

வெள்ளி - 3.00 - 4.30 p.m
சனி, ஞாயிறு - 9.15 - 10.30 a.m

சு. பொன்திவாகரன்

(8643)



## அழகுக்கலைப் பயிற்சி

**Oriflame**

அழகுக்கலைப் பயிற்சியினால் பல ஆலோசகர்களையும் சுயாதீன முகாமையாளர்களையும் உருவாக்கி வெற்றியடையச் செய்த சுவீடன் நாட்டு ஒறிபிளேம் (Oriflame) நிறுவனம் தனது 45ஆவது வருட நிறைவை முன்னிட்டு Hair style, Bridal Make-up பயிற்சி பட்டறையை ஆரம்பிக்கவுள்ளது.

காலம் - 16, 17/06/2012
நேரம் - 02.00 pm
இடம் - 187/30, யுனியன் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரசந்தி அருகாமை கொட்டடி வீதி)

அனுமதி இலவசம். ஆசனங்களுக்கு 15.06.2012ற்கு முன்னர் முற்பதிவு செய்யவும்.

தொடர்புகளுக்கு:- 0771336124/ 0773775000

(8639)


## விளையாடிய சிறுமி தவறி விழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் காணப்பட்ட ஏணிச் சறுக்கலில் விளையாடிய சிறுமி தவறி கீழே விழுந்ததில் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றுள்ளது.

இதில் சங்கானை சந்தையடியினை சேர்ந்த வசந்தகுமார் கஜிதாயினி (வயது-6) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார்.

குறித்த சிறுமி பாடசாலை முடிபுற்று பெற்றோர்கள் வரும் வரையில் ஏணிச் சறுக்கலில் விளையாடியுள்ளார்.

இதன்போது கீழே தவறி விழுந்த சிறுமி தலையில் படுகாயமடைந்து மானிப்பாய் வைத்தியசாலைக்கு பாடசாலை ஆசிரியர்களால் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-4)


மூன்றாம் ஆண்டு நினைவினில்

அமரர் அப்புத்துரை முருகையா
(ஆசாரி ஏழாலை)



- தோற்றம் - 01.08.1943
- மறைவு - 18.06.2009

எங்கே போனீகள்
ஆண்டு மூன்று ஆனபோதும்
எம் இதயத்து வேதனை மறக்குமோ
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

ஜெயராசா குடும்பம்
சுரேஸ்வரன் குடும்பம்
நீர்வேலிவடக்கு

(C-269)

# இன்று ஒரு தகவல்

## வாதத்துக்கு மருந்து!

ஒரு ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் பார்வை யிழந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சில பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் சொன்னார்;

"சூரியன் வெளிச்சத்தை கொடுக்கிறது. சந்திரன் வெளிச்சத்தை கொடுக்கின்றது. விண்மீன் வெளிச்சத்தை கொடுக்கிறது. வெளிச்சம் ஒன்று இருப்பதால்தான் நமக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கிறது" என்றார்.

உடனே பார்வையிழந்த அந்தப் பெரியவர்; வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?" என்றார்.

"உண்மையிலேயே ஒளி இருக்கிறது!" என்றார் மற்றவர்.

"நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறினார்.

"சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக்கிறதாகச் சொன்னார்கள்!"

"அதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால்... அதையெல்லாம் என்னை கொஞ்சம் தொட்டுப் பார்க்க விடுங்கள்!" என்றார்.

"அதையெல்லாம் தொட்டு அறிய முடியாது!" என்றார்.

"அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கிறேன்" என்று சொன்னார்.

"அதுவும் முடியாது" என்றார்.

"சரி... அதுவும் முடியவில்லையென்றால் அந்த வெளிச்சத்திலே சிறிதளவு எடுத்து என் கையிலே கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்து கொள்கிறேன்" என்றார்.

எந்த வகையிலேயும் அவுரை ஒப்புக்கொள்ள வைக்க முடியவில்லை.

அவரை சுற்றியிருந்தவர் எல்லோரும் குழப்பமடைந்தார்கள்.

"என்ன... நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா?" என்றார்.

என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் "மாயை" என்கிறேன். நீங்கள் என்னை அவமானப்படுத்துவதற்காக இப்படி சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் "பார்வை" இருப்பதாகவும்... அது எனக்கு இல்லை என்கிறதாகவும் சொல்லி என்னை நீங்கள் அவமதிக்கிறீர்கள். அப்படியென்றார் தர்க்க சாஸ்திரத்திலே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்... "வெளிச்சம்' இருக்கிறதை இவர் நம்பவேண்டும். இவரை நம்பவைக்க வேண்டுமென்றால்... அது புத்தராலேதான் முடியும் என்று கூறினார்கள்.

"சரி அவரிடம் போவோம்," என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக்கிறேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான் நம்பமுடியும்.

"ஒளியை அனுபவித்து அறியாத வரையில்தான் நம்ப முடியும்.

ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா, இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்!" என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; "உங்களைக் குணப்படுத்தி விடலாம்... உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... மருத்துவம் தான்" என்றார்.

ஒரு வைத்தியரிடம் அழைத்துக் கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். புத்தரை வணங்கினார்.

"நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர்வாதம் செய்யவில்லை! என்றுடைய பிரச்சினை மருத்துவரால்தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள்" என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் நிலைமை இதுதான்– அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர் கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்களுக்குப் பின்புதான் புரியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தெல்லிப்பழை புற்றுநோய் விடுதிக்கான பணிகள் துரிதகதியில் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

கலேர்ஸ் ஒவ் கறேஜ் நிதியம் கடந்த வருடம் நடைபவனித் திட்டத்தின் மூலம் வடமாகாண புற்று நோயாளர்களுக்காக ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதியுடன் கூடிய நவீன புற்றுநோய் வைத்தியசாலையை தெல்லிப்பழையில் அமைக்கவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர் புற்று நோய் விடுதியை அமைக்கவும் நிதி திரட்டியது.

இவ்விடயம் தொடர்பாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் கடந்த 11 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று அவரது செயலகத்தில் இடம் பெற்றது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி இவ் வேலைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக இக்கூட்டத்தில் கலந்துகொண்ட கலேர்ஸ் ஒவ் கறேஜ் நிதியத்தின் பிரதிநிதி தெரிவித்தார்.

மேலும் 200 மில்லியன் ரூபாவினை இந்நிறுவனம் நிதியாகச் சேகரித்து மேற்படி கட்டட வேலைகளைத் தொடங்குவது தொடர்பாக இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இக்கட்டடம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி, ஜனாதிபதி செயலணிக்குழுவின் அனுமதி என்பன பெறப்பட்டு சுகாதார அமைச்சுடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதற்குரிய கட்டட வேலைகளை ஆரம்பிக்க கலேர்ஸ் ஒவ் கறேஜ் நிதியத்தால் ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்ய கேள்வி கோரப்பட்டுள்ளது.

இதன்படி இவ்வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் அதன் படி வேலைகள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளன.

முதலாவதாக புற்று நோய் சிகிச்சைப் பிரிவிற்குரிய ஆண்கள், பெண்கள் விடுதிகள் அமைத்தல், இரண்டாவதாக சிறுவர் புற்றுநோய் சிகிச்சை விடுதி அமைத்தல், மூன்றாவதாக புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் கதிரியக்கப் பிரிவு அமைத்தல் என்று கிரமமாக இக்கட்டுமானப்பணிகள் யாவும் 18 மாத காலத்தினுள் பூர்த்தியாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், புற்றுநோய் சிகிச்சை நிபுணர்களான டாக்டர் என்.ஜெயக்குமரன் மற்றும் டாக்டர் ஆர்.கிரிஷாந்தி, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர், கலேர்ஸ் ஒவ் கறேஜ் நிதியப் பிரதிநிதி கிருஷ்ணசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

## மாம்பழத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி திக்கரை முருகன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாம்பழத்திருவிழாவும் மாலை நிகழ்வாக திருச்செந்தூர் சுப்பிரமணிய புஜங்கம் பிரதி வெளியீடும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 75 | 60 | 70 | 40 |
| உருளைக்கிழங்கு | 115 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 80 | 160 |
| தக்காளி | 130 | 140 | 130 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | -- | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 100 | 180 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 50 | 60 |
| வாழைக்காய் | 40-50 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 100-140 | 120 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 140 | 130 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 80 | 90 |
| பயற்றங்காய் | 60-70 | 80 | 110 | 60 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 180 |
| பீற்றூட் | -- | 80 | 80 | 90 |
| கறிமிளகாய் | -- | 180 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 70 | 100 | 120 | 120-140 |
| போஞ்சி | -- | 160 | 130 | 180 |
| கத்தரிதம்புள்ள | -- | 40 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 5 | 10 | 20 | 10 |
| தேசிக்காய் | 130-150 | 70 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 16-20 |

## இராசி பலன்

15.06.2012
(ஆனி 01, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 1.39 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 3.20 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை
சுபநேரம் 5.53-7.23 மணிவரை
ஏகாதசி விரதம்.

**மேடம்** மனதில் புதிய புதிய சிந்தனைகள் தோன்றும், கௌரவமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பணிகளில் சிறு மன உளைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம்.

**மிதுனம்** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயல் ஒன்றைச் செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், தொழில் நன்மை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** எதிர்பாராத வகையில் சில மனஸ்த்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கூடிய கவனமெடுக்க வேண்டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**துலாம்** இனசனத் தொடர்புகள் அதிகரிக்கும், திட்டமிட்ட பயணங்கள் செல்ல நேரிடலாம், கௌரவமான நாள், பொருளாதார நிலை உயர்வடையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.


**தனுசு** வியாபார விருத்தி ஏற்படும் நாள், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**கும்பம்** பயணங்களால் பலனுண்டு, சகோதர ஒற்றுமை பலப்படும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலை உயர்வடையும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் இடம்பெறலாம், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, நண்பர்கள் பக்க பலமாக இருப்பர்.

வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு 26

கீரிமலை நகுலேஸ்வரத்தை மாலை ஆறு மணியளவில் வந்தடைந்த காளைமாடு யாருடைய வழிகாட்டலுமின்றி ஆலய வாசலை நோக்கி நடக்கத் தொடங்கியது.

காளைமாட்டின் கயிற்றை பிடித்தவர்கள் பின்னே நடக்க காளைமாடு நகுலேஸ்வரத்தானைத்தேடி முன்னேசெல்கின்றது.


காளைமாட்டின் வருகைக்காக ஆலய முன் மண்டபத்தில் மகர கும்பும் வைக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில் காளைமாடு நிற்கின்றது. ஒரு கணம் தனது தலையை உயர்த்தி, நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானைப் பார்க்கின்றது.

அந்தப் பார்வைக்குள் இருக்கக் கூடிய பூர்வ ஜென்மத்துத் தொடர்பை யார்தான் உணரமுடியும்.

காளைமாட்டிற்குப் பட்டாடை அணிவிக்கப்பட்டு விபூதி பிரசாதம் தரிக்கப்பட்டது. நகுலேஸ்வர ஆலய பிரதமகுரு மாரியாதைக்குரிய சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் பஞ்சதீப ஆராதனை செய்து வைத்தார்.

தொடர்ந்து, காளைமாட்டை நகுலேஸ்வரர் ஆலய பிரதம குருவிடம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி



வரதலிங்கம் தலைமையில் கையளிப்பு வைபவம் இடம் பெற்றது.

இதன்போது ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள், "இந்தக்காளைமாடு எங்கு வந்து சேரவேண்டும் என்று விதி இருந்ததோ அது அங்கு வந்துவிட்டது" இது தான் இறைசெயல் என்றார்.

தொடர்ந்து யாழ்ப்பாண வணிகர்கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம், கலாசார உத்தியோகத்தர் எஸ். உதயபாலன், சு.கு.சிவபாலன் ஆகியோர் உரையாற்றினர்.

இச்சந்தர்ப்பத்தில் பசுக்கள், இடபங்களைக்காக்கும் அமைப்பின் தலைவர் கங்கைவேணியன் காளை மாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களை தனது வாகனத்தில் கொண்டு வந்து சேர்த்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் காளை மாடு காப்பாற்றப்பட்ட வரலாற்றின் பாடம், அனைவரும் ஒன்று பட்டால் எதனையும் சாதிக்க முடியும் என்பதாகும்.


யாழ்ப்பாணத்தில் இந்து மக்கள் அனைவரும் காளைமாட்டைக் காப்பாற்றுவதில் ஒன்றுபட்டனர் என்ற செய்தியினூடாக,

சிவபூமி என்று போற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் மாட்டிறைச்சி விற்பனை முற்றாகத் தடுக்கப் படவேண்டும் என்ற உண்மை உணர்த்தப்படுகின்றது.

மாட்டிறைச்சி விற்பனையை முற்றாகத் தடுப்பதிலும் மாட்டிறைச்சிக் கடைகளை இல்லாது செய்வதிலும் யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் பிரதேச சபைகளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பிரதோச விரதத்தில்**
**விஷேட பூசை வழிபாடு**

கடந்த மாத பிரதோச விரதத்தின்போது காளைமாட்டுக்கு விஷேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. இப்போது நகுலேஸ் வரத்துக்குச் செல்கின்ற அடியவர்கள் காளை மாட்டைப் பார்க்கவும் தரிசிக்



கவும் தவறுவதேயில்லை.

சுருங்கக் கூறின், கண்டி தலதாமாளிகையில் ஒரு காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த "ராஜா" என்ற யானை போல இந்தக் காளைமாடும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

காளைமாட்டைக் காப்பாற்றுவதில் முன்னின்று பாடுபட்ட யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச அதிபராக இருந்த திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த அவரின் முழுமையான நோக்கம் காளைமாட்டைப்பார்க்க வேண்டும் என்பதுதான்.

கீரிமலைக்குச் சென்ற அவர், காளைமாட்டைப் பார்த்துவிட்டு நகுலேஸ்வரத்தில் இருக்கக்கூடிய நந்தியின் தோற்றத்தில் இந்தக் காளைமாடு இருப்பதாகக் கூறிய போது அதைக்கேட்டவர்கள் மனம் நெகிழ்ந்துபோயினர்.

காளைமாடு காப்பாற்றப் பட்டது மட்டுமன்றி இன்று அது நகுலேஸ்வரத்தில் நடமாடும் இடபமாக இருப்பது எங்கள் அனைவருக்கும் மனநிறைவைத் தருகின்றது என அகமகிழ்ந்த முன்னாள் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களின் ஆலோசனை.

காளைமாட்டுக்குத் தேவையான பச்சைப் புல்லை யாரேனும் ஆலய வளாகத்தில் வைத்து விற்பனை செய்வார்களாயின் ஆலயத்திற்குச் செல்கின்றவர்களும் மற்றும் பிதிர்க்கடன் தீர்க்கச் செல்வோரும் பச்சைப் புல்லை வாங்கி அந்த இடபத்துக்குக் கொடுக்கமுடியும். இது புண்ணியகருமமாக அமைவதுடன் புல்விற்பனை மூலம் ஒரு குடும்பம் சீவியம் நடத்தவும் முடியும் என்றார்.

அவரின் அருமையான இக் கருத்தை நடைமுறைப்படுத்த உரியவர்கள் முன்வரவேண்டும்.

கூடவே, காளைமாட்டுக்குத் தேவையான உணவுகளை வழங்குவது அடியார்களின் கடமை என்பதோடு தமிழர் தாயகத்தில் மாட்டிறைச்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான "தொடக்கப் புள்ளியாக காளைமாட்டைக் காப்பாற்றிய அற்புத நிகழ்வு அமையவேண்டும் என்பது எம் விருப்பம்.

காளைமாடு பற்றிய இத் தொடரை எழுதி முடிப்பதில் தேவையான தகவல்களை வழங்கிய திருநெல்வேலி கால்நடை உற்பத்தித் திணைக்கள கால்நடை மருத்துவர் எஸ். மகாதேவன் மற்றும் புகைப்படங்களைத் தந்துதவிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.அசோக்குமார் உட்பட, ஒவ்வொரு தடவையும் காளைமாடு பற்றிய தொடரின் விமர்சனங்களை வழங்கி ஊக்குவித்த அத்தனை உள்ளங்களுக்கும் நன்றி கூறி இத் தொடரை நிறைவுசெய்கின்றோம்.

முற்றும்



விதுரன்




# எம்.பிக்களுக்கு அவசர மடல்

எமது தரப்பில் இருந்து எம்முடைய கவலைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் ஆயிரம் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கும் மூவாயிரம் டிப்ளோமா ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு வழங்குவதாக மூவாயிரம் கணித, விஞ்ஞான, ஆங்கில மற்றும் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான உள்ளீர்ப்பு பரீட்சை கடந்த ஆண்டு நடைபெற்று நேர்முகப் பரீட்சையும் முடிவடைந்துள்ளது.

ஆயினும் தற்போது ஆயிரம் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு மாத்திரமே எதிர்வரும் 29 ஆம் திகதி நியமனம் வழங்கப்படவுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார். இதில் கணித, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களின் நியமனம் பற்றி எந்தவொரு தகவலும் இடம்பெறவில்லை என்பது அதிர்ச்சிக்குரிய விடயமாகும்.

மேலும் ஒரேநேரத்தில் தகுதிகாண் பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் நடைபெற்ற பட்டதாரிகளிடையே ஏன் இந்த வேற்றுமை! அவர்களுக்கு நியமனம் வழங்கும் போது கணித, விஞ்ஞானப் பட்டதாரிகளாகிய எமக்கும் நியமனம் வழங்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்!

எனவே, உரிய காலத்தில் எமக்குரிய நியமனங்களை வழங்குவதன் மூலம் யாம்பெற்ற கல்வியை இன்றைய இளைய தலைமுறையினருக்கு வழங்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமக்கும் எதிர்வரும் 29 ஆம் திகதி தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் இவ்விடயத்தை பாராளுமன்றத்தில் ஒரு முறை கேள்வி எழுப்பினாலே போதும்!!

**விஞ்ஞான பட்டதாரிகள்.**
*(2008,2009,2010)*


இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



இருபத்தோராம் திருவிழா (16.06.2012)

**தமிழ் காக்கும் கடவுளென நீ வருவாய்!**



நீயிருந்து கோலோச்சும் பதியினிலே -உன்
தாயவளும் துணையிருந்து காக்கின்றீர்கள்
ஈராறு விழிசொரியும் பார்வையிலே- எங்கள்
நோய்நொடி துயர் துன்பம் மாளுதையா!
நீயேறி மயில் மீது வருகையிலே- சேவல்
தமிழ் காக்கும் கடவுளெனக் கூவுதையா!
நாயேனும் குமரா உனை அழைக்கையிலே -உன்
திருமுகமும் பேரொளியாய்த் தெரியுதையா!



பரமன் மகன்
இணுவில் மேற்கு

21 ஆம் திருவிழா உபயகாரர்

(சி-081)


# பாடசாலையொன்றை விரைவாக அமைக்க நடவடிக்கை எடுங்கள்

## கிளி.மக்கள் கூட்டமைப்பிடம் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கிருஸ்ணபுரம் கிராமத்தில் பாடசாலை ஒன்றை விரைவுபடுத்தி அமைத்துக் கொடுக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரிடம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

குறித்த கிராமத்தில் 1972 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள வன்முறைகளினால் பாதிக்கப்பட்டு மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்த மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மிக நீண்டகாலமாக இந்தப் பகுதிக்கென நிரந்தரமான பாடசாலை ஒன்றில்லாமையினால் இந்தப் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் போக்குவரத்து வசதி இல்லாத நிலையில் நகர்ப்புறப் பாடசாலைகளில் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் கல்வியை தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் மிக நீண்டகாலமாக தமது கிராமத்திற்கென தனியான பாடசாலையொன்று அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தனர். இதனையடுத்து கிராமத்திற்கென இராமகிருஸ்ண மிஷன் ஊடாக பாடசாலை ஒன்றை அமைப்பதற்கென காணி ஒதுக்கப்பட்டு அதிபரும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அரச தரப்பு எம்.பி. ஒருவரின் தலையீடு காரணமாகவும் அரசியல் நோக்கத்திற்காகவும் பாடசாலை அமைவதை தடுத்து நிறுத்தியதாக தெரியவருகின்றது. இதனையடுத்து நீண்டகாலம் பொறுத்திருந்த மக்கள் இன்றையதினம் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் தமது கோரிக்கை யினை முன்வைத்துள்ளனர். இந்நிலையில் கிராமத்தில் பாடசாலை ஒன்று அமைவது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்புகளுடன் முதற்கட்ட மாக உரையாடியுள்ளதாக தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் பொதுமக்களின் கோரிக்கை மிகவும் நியாயமானது எனவும் அவர்களின் கோரிக்கையினை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம் எனவும் தெரிவித்துள்ளார். (அ-2)


BCBS CAMPUS

320,2nd floor, R.A. De Mel Mawatha,
Colombo-3.

- UK / FRANCE STUDENT VISA
- UK WORK / VISIT VISA
- USA VISIT VISA
- NORWAY JOB SEEKING VISA

பெற்றுக் கொள்ள முடியும்

Degree & MBA Programs From UK Universities to Complete While Sri Lanka migration to Canada, Australia & Newzealand.

France Visa Can be Arranged

June 20 க்கு முன் பதிவுகளை மேற்கொண்டு இலவச விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளுங்கள்

அழையுங்கள்:-

0112301691, 0772227393

(C-265)


# பிக்குகள் பாராளுமன்றம் செல்வதை அனுமதிக்க முடியாது-அஸ்கிரிய பீடாதிபதி

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் பாராளுமன்றிற்குச் செல்வதை, அரசியலில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதனால் மதத்திற்கும் அவர்களுக்கும் அவப்பெயரும் அசௌகரியங்களுமே ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றிற்கு தெரிவாகாமல் பக்தர்களுக்கு ஆலோசனை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்வது குறித்து பௌத்த விகாரைகளில் மதத் தொண்டு ஆற்றிக் கொண்டே அரசியல்வாதிகளுக்கு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றில் செயற்பாட்டு அரசியலில் ஈடுபடாமலேயே பௌத்த பிக்குகளினால் நாட்டுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்ற முடியும் என அஸ்கிரிய பீடாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)


PHYSICS
Personal Class
Medium:- Tamil & English
T.P.0778565195
(8636)

# வலி.வடக்கு மக்கள் மின்சாரம்வழங்கக்கோரி
# ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

மின்சார இணைப்பினைப் பெற்றுத்தருமாறு கோரி வலி. வடக்கு மக்கள் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில்,

வலி. வடக்குப் பிரதேசத்தில் இருந்து கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து சென்ற நாங்கள்,கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எங்களது சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்தப்பட்டோம்.

எமக்கான உதவிகள் வழங்கப்பட்டு வந்தாலும் இரண்டு வருடங்கள் கடந்து செல்லும் நிலையிலும் எங்களுக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

மீளக்குடியமரும் மக்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழாக முன்னெடுக்கப்பட்டு வரும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழாக இலவச மின்னிணைப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைவாக இலவச மின்விநியோகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் மின்சாரம் எங்களை எட்டிப்பார்ப்பதாக தெரியவில்லை.

அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்றாக மின்சாரம் இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டும் அந்த அடிப்படை உரிமையை அனுபவிக்க முடியாமல் இருக்கின்றோம்.

கடந்த இருபது வருடங்களாக மக்கள் பாவனையில்லாது இருந்ததன் காரணமாக பற்றைகள் வளர்ந்து காடுகள் மண்டிய பிரதேசமாகவே எமது பகுதிகள் இருக்கின்றன. இதன் காரணமாக இரவு நேரங்களில் பாம்பு மற்றும் விச ஜந்துக்கள் உலாவுகின்றன.

மின்சாரம் இல்லாத நிலையில் இவ்வாறான அபாயம் உள்ள இடங்களில் வசிப்பது எவ்வளவு கடினமானது என்பதை உணர்வீர்கள் என்பதை நம்புகின்றோம்.

அத்தியாவசியமான ஒன்றாக இருக்கும் மின்சாரத்தை நாங்கள் இரண்டு வருடங்களாக அனுபவிக்கவில்லை. ஒரு நிமிடம் மின்சாரம் நிறுத்தப்படுகையில் அதனை அனுபவிப்பவர்களின் உணர்வுகள் எவ்வாறு இருக்கின்றதோ அதைப் போன்றே எங்களது உணர்வுகளும் இவ்வளவு காலமாக இருக்கின்றது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழான இலவச மின்விநியோகத்தை வேண்டி நிற்கும் நாங்கள் இரண்டு வருடங்களாக கிடைக்காத நிலையில் மாற்று ஏற்பாடு தொடர்பில் ஆராய்ந்த போது அதிகளவான பணம் செலுத்தின் (ஒரு தூணுக்கு 25 ஆயிரம்) உடனடியாக மின்சாரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்து அல்லற்பட்டு மீளக்குடியமர்ந்த மக்களாகிய எங்களால் அவ்வளவு தொகைப் பணத்தை செலுத்தி மின்சாரத்தைப் பெறமுடியாது.

மேலும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக மின்சாரம் வருவது தாமதமடைவது தொடர்பில் கேட்டபோது தமக்கான உபகரணங்கள் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்தவுடன் மின்சாரம் வழங்கப்படும் என்கின்றனர். ஆனால் மறுபுறம் உபகரணங்களை பணத்திற்கு வழங்க மின்சார சபையின் இன்னொரு பிரிவு தயாராக இருக்கின்றது.

மின்சார சபையினுள் வெவ்வேறு பிரிவுகளாக இயங்கினாலும் எங்களது நன்மை கருதி வடக்கின் வசந்தம் திட்டத்தினர் பணத்துக்கு மின்சாரத்தை வழங்கத் தயாராக இருப்பவர்களிடம் உபகரணங்களைப் பெற்று எமக்கான மின் இணைப்பை பூர்த்தி செய்து விட்டு உங்களுக்கு உபகரணங்கள் வரும் போது அதனை திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுகின்றோம்.

மின்சாரம் இன்றைய காலத்தில் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்த நீங்கள் எங்களது கோரிக்கைக்கு உடனடியாகவே தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என அப்பகுதி மக்களினால் வழங்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மகஜரின் பிரதிகள்,

அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர்,மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மின்சார சபையின் வட பிராந்திய பொறியியலாளர், மின்சார சபையின் வடக்கின் வசந்தம் வேலைத்திட்ட பொறியியலாளர், இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டு தூதுவராலயங்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ-6)

## மூன்றாம் திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத்திருமுறை மன்றம் நாயன்மார் நால்வரை ஆலயங்களில் எழுந்தருளச் செய்து மாதம் ஒரு கோவில், மாதம் ஒரு திருமுறை முற்றோதலென பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றது.

அந்த வகையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் திருநெல்லிவேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் நாயன்மார் நால்வர் எழுந்தருளச் செய்து மூன்றாந்திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தினமும் மாலைப் பூசையுடன் முற்றோதல் நடைபெறும் என மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கின்றார். (அ-9)




## கல்விசாரா ஊழியர்களின் போராட்டத்திற்கு யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து மாணவர் ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.

அகில இலங்கை ரீதியாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரி காலவரையறையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைவாக யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

எனவே யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கல்விசாரா ஊழியர்களின் போராட்டத்தின் நியாயத்தன்மைகளை ஏற்றுக் கொண்டதுடன் ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் இப்போராட்டத்துக்கு பூரண ஆதரவை வழங்குவதாக முடிபெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தின் மூலம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் யாவும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

ஆகவே அரசாங்கம் இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு சுமூகமான முறையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுடன் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தடையின்றி தொடர்ந்து இடம்பெற ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று மாணவர் ஒன்றிய அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-7)

## உயிரியல் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு ஏ யானது இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்துடன் இணைந்து வட மாகாணப் பாடசாலைகளில் க. பொ.த. உயர்தரப் மாணவர்களுக்கு உயிரியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான உயிரினப் பன்னிலை பேணல் ஒருநாள் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையானது நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடபகுதியில் விஞ்ஞான அறிவினை பரப்புதலும் மேம்படுத்தலுக்குமான நோக்கில் இப்பயிற்சிப்பட்டறை நடத்தப்படுகின்றது.

எனவே இதில் உயிரியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் தவறாது பங்குபற்றுவதன் மூலம் பயனடைய முடியும் என யாழ். விஞ்ஞான சங்க பிரிவு ஏ தெரிவித்துள்ளது. (அ-7)

## றோயல் கல்லூரி நாடகப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி இரண்டாமிடம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு றோயல் கல்லூரி நாடக மன்றத்தினரால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற நாடகப் போட்டியின் இவ்வாண்டுக்கான மாவட்டமட்ட நாடகப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடக அணி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் நான்கு விருதுகளையும் பெற்றுக் கொண்டது.

கொழும்பு றோயல் கல்லூரியின் நாடகப்போட்டியானது நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றபோதே மேற்படி மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

இந்நாடகத்திற்குரிய விருதுகளாக சிறந்த நடிகராகவும் சிறந்த நெறியாளராகவும் கெ. கொட்வினும் சிறந்த நடிகையாக சதீஸ்குமாரும் சிறந்த இசையமைப்பாளராக பகீரதனும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நாடகத்திற்கான நடிப்பு நெறியாள்கை பயிற்சிகளினையும் வழிப்படுத்தலையும் நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் எஸ். ரி. குமரன் வழங்கியுள்ளார்.

இவ்வெற்றியின் மூலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கடந்த 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பாடு முதற்தடவையாக றோயல் கல்லூரி நாடகப்போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

1990 ஆம் ஆண்டு சத்திய சோதனை என்னும் நாடகம் 3 ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ்.பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம்,புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# கிளி.நகரை அண்டிய பகுதிகளுக்கு மின்சாரம்

## சந்திரகுமார் எம்.பி.உறுதியளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகருக்கு அண்மையிலுள்ள கிராமங்களான உதயநகர் மற்றும் அம்பாள்குளம் கிராமங்களின் பல பகுதிகளுக்கு மின்கம்பங்கள் நாட்டப்பட்ட போதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத நிலையில் காணப்பட்டது.

அப்பிரதேச மக்கள் பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு.சந்திரகுமார் அவர்களை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து தங்களது பிரதேசங்களுக்கு மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் உடனடியாகவே உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அடுத்துவரும் நாட்களில் மின்கம்பங்கள் நாட்டப்பட்ட பிரதேசங்களுக்கான மின்சாரம் வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமை முதல் மேற்படி பிரதேசங்களுக்கான மின் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மின்சார சபையினர் தெரிவித்தனர்.

அத்துடன் உதயநகர் பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாது மோசமான நிலையிலுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மக்களின் கோரிக்கைக்கு அமைவாக புனரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தனது அலுவலர்களையும் நேரில் அனுப்பி பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் அவர் பணித்துள்ளார். (அ-7)

# சிறகு விரியாப்பறவைகள் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனஅங்கத்தவர் கலாபூசணம் நாவற்குழி சு.சிவராசாவின் சிறகு விரியாப்பறவைகள் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி வீதி, இல. 09 ரிமர் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இலங்கைத் தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாணத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் எம்.பாலசுப்ரமணியம் ஆற்றவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் பேராசிரியருமான கலாநிதி என்.சண்முகலிங்கன் நூலினை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக நூலகர் செல்வி எஸ்.அருளானந்தம் பெற்றுக் கொள்வார்.

அத்துடன் இந்நூலின் ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆற்றுவார். (அ-9)

# தெல்லிப்பழை- கலை இலக்கிய களம் வெள்ளிவிழா சிறுகதைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கலை இலக்கிய களத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு சிறுகதைப்போட்டியை நடத்தி பணப்பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக கலை இலக்கியக் களத் தலைவர் சு.செல்லத்துரை அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கம், நீர்கொழும்பு விஜயரட்ணம்இந்து மத்திய கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

விண்ணப்பித்த போட்டியாளர்கள் தமக்கு விரும்பிய இடத்தில் போட்டிக்கு பங்குபற்ற முடியும். *மீள் குடியேற்றம்* என்ற கருப்பொருளினை கொண்டதாக சிறுகதைகள் அமைதல் வேண்டும்.

போட்டியாளர்கள் தமது கற்பனைக்கேற்ப மேற்குறிப்பிட்ட கருப்பொருளில் சிறுகதை எழுதி பொருத்தமான தலைப்பிடவேண்டும்.

திறந்த போட்டிக்கு வேறாகவும் தெல்லிப்பழை பிரதேசத்தை சேர்ந்த 18 வயதிற்குட்பட்டோருக்கு வேறாகவும் பரிசுகள் வழங்கப்படும்.

முதலாம் இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ஒவ்வொரு பிரிவுக்கும் முறையே ரூபா 10ஆயிரம், 7 ஆயிரம், 5ஆயிரம் ரொக்கப்பரிசாக வழங்கப்படும். மேலும் தரமான கதைகளுக்கு தலா ரூபா ஆயிரம் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.06 15

★923-பிரான்சின் முதலாம் ரொபேர்ட் மன்னன் உயிரிழந்தான்.

★1184-நோர்வேயின் ஐந்தாம் மாக்னஸ் மன்னன் ஃபிம்ரெயிட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் உயிரிழந்தான்.

★1246-இரண்டாம் பிரெடெரிக்கின் இறப்புடன் ஆஸ்திரியாவின் பாபன் பேர்க் அரச வம்சம் அழிந்தது.

★1389-கொசோவோவில் இடம்பெற்ற சமரில் ஒட்டோமான் படைகள் செர்பியர்களையும் பொஸ்னியர்களையும் தோற்கடித்தன.

★1667-சான் பாப்டிஸ்ட் டெனிஸ் என்ற பிரெஞ்சு மருத்துவர் முதன் முதலில் மனித இரத்த மாற்றீட்டை செயற்படுத்தினார்.

★1752-மின்னல் ஒரு மின்சாரம் என்பதை பெஞ்சமின் பிராங்கிளின் நிறுவினார்.

★1775-அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வோஷிங்டன் அமெரிக்கத் தரைப்படைத் தளபதியாக நியமனம் பெற்றார்.

★1808-ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னனாக முடிசூடினான்.

★1836-ஆர்கன்சா ஐக்கிய அமெரிக்காவின் 25 ஆவது மாநிலமானது.

★1844-இறப்பர் பதப்படுத்தும் முறை (vulcanization) சார்ள்ஸ் குடியர் என்பவரால் காப்புரிமம் பெறப்பட்டது.

★1846-இலங்கையின் ரோயல் ஏசியாட்டிக் சபை என்ற அமைப்பு தனது முதலாவது இதழை வெளியிட்டது.

★1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவின் பீட்டர்ஸ் பேர்க் நகர் அமெரிக்கப் படைகளின் முற்றுகைக்குள்ளானது.

★1904-நியூயோர்க்கில் ஜெனரல் ஸ்லோகம் என்ற கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆயிரத்து 21 பேர் உயிரிழந்தனர்.

★1911-ஐ.பி.எம். நிறுவனம் அமைக்கப்பட்டது.

★1938-பிரித்தானியாவில் லாஸ் லோ பைரோ என்பவர் குமிழ்முனைப் பேனாக்களைக் கண்டுபிடித்தார்.

★1944-இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் சாய்ப்பான் தீவை கைப்பற்றின.

★1954-ஐரோப்பிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு யூ ஏஃபா சுவிட்சர்லாந்தில் அமைக்கப்பட்டது.

★1996-ஐக்கிய இராச்சியம் மான்செஸ்டரில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதலில் 200 பேர் காயமடைந்தனர். நகரின் மத்திய பகுதி பெரும் சேதத்துக்குள்ளானது.

★2007-உலகின் மிகவும் நீளமான 34 கி.மீ. நீள தொடருந்து சுரங்கப்பாதை சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலைக்குக் கீழாக அமைக்கப்பட்டது.

★2009-ரிச்மண்ட் ஹில் முருகன் கோவில் கொடியேற்றம்.

★2009-ஸ்காபோரோ பெரிய சிவன் கோவில் தீர்த்தம்.

### பிறப்புக்கள்

★1914-யூரி அந்திரோப்பொவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் (இ.1984)

★1950-லக்ஸ்மி மிட்டால், லண்டனைச் சேர்ந்த உலகச் செல்வந்தர்களில் ஒருவர்

★1953-உமர் தம்பி, தமிழ்க் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (இ.2006)

### இறப்புக்கள்

★1838-ரோணியஸ், ஜேர்மனியத் தமிழறிஞர் (பி. 1790)

★1849-ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது ஜனாதிபதி (பி.1795)

★1948-ராஜா சர், அண்ணாமலை செட்டியார் (பி.1881)

★1971-வெண்டல் ஸ்டான்லி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1904)

### சிறப்பு நாள்

★டென்மார்க்- கொடி தினம்



★2008-ஈழத்தின் ஆன்மீகவாதி -தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு தினம் (பி.1925)

# ஆனி மாத இராசி பலன்

## 15.06.2012 - 15.07.2012



## மேடம்

**அஸ்வினி, பரணி,
கார்த்திகை 1 ஆம் பாதம்**

### உங்கள் திட்டங்கள் நிறைவேற திறமைமிக்கவர்களின் உதவி கிட்டும்

**சேமிப்பு உயரும்!
எண்ணங்களை எளிதில் செயலாக்கும் மேட இராசி நேயர்களே!**

ஈகை குணமும், மன தைரியமும் அதிகம் பெற்றவர்கள் நீங்கள். பொய் சொல்லக்கூடாது என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருப்பீர்கள். எல்லோரிடமும் பிரியமாக நீங்கள் பேசுவதால், உங்களை அனைவருக்கும் பிடிக்கும். ஆடம்பர செலவு செய்ய யோசிப்பீர்கள். ஆனால், தேவைப்பட்ட நேரத்தில் நிர்ப்பந்தத்தின் பெயரில் செலவிடுவீர்கள்.

உங்களுக்கு இந்த ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, மாதத் தொடக்கத்தில் சுக்கிரன், கேது ஆகிய கிரகங்கள் தன ஸ்தானத்தில் இருப்பதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். இராசிநாதன் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் இருப்பதால், பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

சனி வக்ர இயக்கத்தில் இருக்கும் வரை சற்று பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது. அலைச்சலும், வேலைப்பளுவும் கடந்த 2,3 மாதங்களாகவே அதிகமாக இருக்கும். அவை இந்த மாதம் சனியின் வக்ர இயக்கத்திற்கு பின்னால் சரியாக விடும். உத்தியோகம், தொழில் சம்பந்தமாக எந்த முடிவும் எடுக்க முடியாமல் இருந்த உங்களுக்கு, இனி புதிய தெம்போடும், உற்சாகத்தோடும் செயற்படப் போகிறீர்கள்.

அஷ்டமத்து இராகு முன்னேற்ற தடைகளை உருவாக்காமல் இருக்க, இராகு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள், இராகு கவசம் பாடுங்கள். சோகங்கள் மாறும், சுகங்கள் கூடும்.

**கடக புதனின் சஞ்சாரமும்,கன்னிச் சனியின் வக்ர நிவர்த்தியும்!**

ஜூன் 21 ஆம் திகதி இரண்டு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஒன்று கடக புதனின் சஞ்சாரம், மற்றொன்று கன்னிச் சனியின் வக்ர நிவர்த்தி 3,6 க்கும் அதிபதியான புதன் கடக இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, முன்னேற்றப் பாதையை நோக்கி நீங்கள் அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். உடன்பிறப்புகளின் இல்ல விழாவை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

உத்தியோகத்தில் எதிர்ப்பார்த்த சலுகைகள் வந்து சேரும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அரசு வழியிலும் ஆதாயம் கிட்டும். சனி பலப்படுவதால், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் இனி ஒவ்வொன்றாக வெற்றி பெறத் தொடங்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**கன்னி செவ்வாயின் ஆதிக்கம்!**

"கன்னி செவ்வாய் கடலும் வற்றும்" என்பது பழமொழி. உங்கள் இராசி நாதன் செவ்வாய் சனியோடு இணையும்போது, கூட்டாளிகளிடம் கூடுதல் விழிப்புணர்வு காட்டவேண்டும். ஜூன் 23 முதல் சனியும், செவ்வாயும் ஆறில் இணைகிறார்கள். எனவே, ஒரு பகுதியில் கடன் சுமை குறைந்தாலும். ஒரு பகுதியில் கடன் சுமை வளர்ந்து கொண்டே போகும். இடம், பூமி விற்பதில் இருந்த தடை அகலும்.


**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஜூலை 11 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இந்த வக்ர இயக்கம் நன்மையையே வழங்கும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். தீட்டும் திட்டங்களுக்கு திறமை மிக்கவர்கள் உங்களுக்கு உதவி செய்வர். மாமன், மைத்துனர்கள் வழியில் அனுகூலம் கிடைக்கும். கல்விக்காக எடுத்த முயற்சியும் கைகூடும்.

இம்மாதம் வாக்கு ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் கொடுத்த வாக்கை காப்பாற்ற விநாயகப் பெருமானை வழிபாடு செய்யுங்கள்.

இம்மாதம் புது முயற்சிகளுக்கு வெற்றி தரும் மாதமாகும். குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு மனக் குழப்பத்தை அகற்றி, மகிழ்ச்சியை வழங்கும். பணப்புழக்கத்தை அதிகரிக்க வைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வும், உயர்ந்த மனிதர்களின் நட்பும் கிடைக்கும். வக்ரச் சனியின் இயக்கம் நிவர்த்தியாகும் இந்த மாதத்தில் வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். கணவன்- மனைவிக்குள் இருந்த கருத்துவேறுபாடுகள் அகலும். அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள் , ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

### தொழில் வளர்ச்சி மேலோங்கும் தொல்லை தந்த எதிரிகள் விலகுவர்

**திடீர் மாற்றங்கள் தித்திக்க வைக்கும்!
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் இடப இராசி நேயர்களே!**

வெளிப்படையாக நீங்கள் பேசுவீர்கள். பெரிய மனிதர்களுக்கு பிரியமானவர்களாக இருப்பீர்கள். மக்களை வழிநடத்திச் செல்லும் சாமர்த்தியம் உங்களுக்கு உண்டு. யதார்த்தவாதியாக நீங்கள் இருப்பதால் அடிக்கடி பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் மகா சமர்த்தர்கள் என்று வர்ணிக்கப் படுவீர்கள்.

உங்களுக்கு இந்த ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்த பார்க்கும் போது, மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் சுக்கிரன் குருவோடு கூடி, விபரீத இராஜ யோகத்தை உருவாக்குகிறார். எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிட்டும். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து, சில காரியங்களை முடித்து கொடுப்பார்.

ஜென்ம இராசியில் கேது சஞ்சரிப்பதால் ஏதேனும் ஒரு மனக்குறை உங்கள் உள்ளத்தில் இடம் பெற்றிருக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் அவற்றை எல்லாம் நீங்கள் சீராக்கிக் கொள்ள இயலும். உங்களுக்கு யோகம் செய்யும் சனி, வக்ர இயக்கத்தில் அல்லவா இருக்கிறார். எனவே, அதன் வக்ர இயக்கம் முடியும்வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

செவ்வாய், சனி சேர்க்கையும் இந்த மாதம் ஏற்படப்போவதால் உறவினர் பகை அதிகரிக்கும். எனவே, உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப்பேசுபவர்களை இனம்கண்டு கொண்டு, அதற்கேற்ற விதத்தில் செயற்படுவது நல்லது.

**கடக புதனின் சஞ்சாரமும், கன்னி சனியில் வக்ர நிவர்த்தியும்!**

ஜூன் 21 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 2, 5க்கு அதிபதியான புதன் 3 ஆம் இடத்திற்கு வரப் போகிறார். எனவே, பண வரவு திருப்தி தரும். தாமதப்பட்ட காரியம் தடையின்றி நடைபெறும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும். வழக்குகளில் வெற்றி கிட்டும். உடன்பிறப்புகள் வழியில் ஒரு நல்ல தகவல் வந்து சேரும். சனியின் வக்ர நிவர்த்திக்குப் பின் தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். காக வாகனத்தானை கைகூப்பித் தொழுது, சனி கவசம் பாடி வழிபாடு செய்யுங்கள். சந்தோஷங்களை மட்டுமே நாளும் சந்திக்கலாம்.

**கன்னி செவ்வாயின் ஆதிக்கம்!**

ஜூன் 23 ஆம் திகதி கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். சனியோடு அது இணைவது அவ்வளவு நல்லதல்ல. பூர்வீக சொத்துக்களில் பிரச்சினை ஏற்பட்டு அகலும். பஞ்சாயத்துக்களில் திசை திருப்பம் ஏற்படும். பிள்ளைகள் உங்களது சொல்லைக் கேட்காமல் ஏதேனும் முடிவை எடுத்துவிடலாம். எனவே, கூடுதல் கண்காணிப்புத் தேவை.

**வக்ர புதனின் இயக்கம்!**

புதன் ஜூலை 11 இல் வக்ரம் பெற்று மிதுனத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பால்யநண்பர்களின் சந்திப்பால் பணவரவைப் பெருக்கிக் கொள்ள திட்டம் தீட்டுவீர்கள். மேலதிகாரிகள் ஒத்துழைப்போடு மிகச் சிறந்த பலன்கள் காண்பீர்கள். அந்நிய தேசத்தில் இருந்துகூட அனுகூலச் செய்தி வந்து சேரும்.

இந்த மாதம் குரு, சுக்கிர சேர்க்கை இருப்பதால், வியாழ பகவானையும், சுக்கிர பகவானையும் தீபமேற்றி வழிபாடு செய்யுங்கள். நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.


இந்த மாதம் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை மேலோங்கும். ஒரு தொகை வந்து சேரும்போது, அதை சுபவிரயமாக மாற்றிக்கொள்ளுங்கள். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் திருப்திகரமாக நடைபெறும். உங்களது பெயரில் சொத்துக்கள் வாங்க குடும்ப உறுப்பினர்கள் முடிவெடுப்பர். உடன்பிறப்புகள் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுவர். பெண்தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

(தொடரும்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 158





போலந்தை மீட்கும் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கான நினைவாலயங்கள்

ஒரே போர்த்தந்திரத் திசையில் ஒவ்வொரு சேனையிலும் இரண்டு டாங்கிப்படைகளைப் பயன்படுத்தியது, நடவடிக்கையின் சிறப்பு அம்சமாக இருந்தது. இதன் பயனாய் சேனைகளின் முக்கிய தாக்குதல் படைத்திரட்டின் பிளந்து செல்லும் திறமை அதிகரித்தது, தாக்குதல் நடவடிக்கையில் உயர்வான வேகங்களுக்கு வகை செய்யப்பட்டன. முந்தைய நடவடிக்கைகளுக்கு மாறாகத் தனி டாங்கி பிரிகேடுகளும் ரெஜிமென்ட்களும், கம்பெனிவரை சிறிதாக்கப்பட்டன. துப்பாக்கிப் படைப் பட்டாலியன்களுக்கு அளிக்கப்பட்ட இவை எதிரி தற்காப்பின் பிளவு ஆழம் முழுவதும் பட்டாலியன்களுக்கு ஆதரவாக இயங்கின. இது காலாட்படைக்கு நேரடி ஆதரவளித்த டாங்கிகளுக்கும் துப்பாக்கிப் படைக்குத் துணை பிரிவுகளுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பைக் கணிசமாக மேம்படுத்தியது.

நடவடிக்கையின் இன்னொரு சிறப்பு அம்சம் என்னவெனில் முக்கியத் திசைகளில் பீரங்கிப்படையின் பெரும் தாக்குதலாகும். இதில் ஒரு சில பீரங்கிப்ப படைக் கோர்பஸ்களும் பிளவு டிவிசன்களும் பங்கேற்றன. திடீரென ஒரே நேரத்தில் பீரங்கித் தாக்குதலைத் தொடுக்கும் நோக்கத்தோடு பூர்வாங்கப் பீரங்கிப் படைத் தாக்குதல் சேனைகளின் அளவில் மையப் படுத்தப்பட்டு நடத்தப்பட்டது.

நடவடிக்கையின் வெற்றியில் விமானப்படை பெரும் பங்காற்றியது. விண்ணில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய இது காலாட்படைகள், டாங்கிப் படைகளின் நடவடிக்கைகளை ஆதரித்தது. எதிரியின் சேமப் படைகள், தற்காப்பு எல்லைகள், படைத் தலைமையகங்கள், பின்னணிகள் மீது பலத்த தாக்குதல்களைத் தொடுத்தது. இரண்டு சேனைகளின் விமானப்படைகளும் 54,000 க்கும் அதிகமான விமானப்பறத்தல்களை மேற்கொண்டன, 1150 வான் சண்டைகளை நடத்தின, 908 எதிரி விமானங்களை அழித்தன. விமானங்களைக் கிளப்புவதற்கும் இறக்குவதற்கும் சோவியத் விமானிகள் வாகனச் சாலைகளைப் பயன்படுத்தினர். உதாரணமாய் மும்முறை சோவியத் யூனியன் வீரர் விருது பெற்ற கேர்னல் பக்ரீஷ்கின் தலைமையிலான 9-வது கார்டு விமானப்படை டிவிசன் விமானங்களை கிளப்பி இறக்கும் தளமாக பிரெஸ்லாவ்ல்- பெர்லின் வாகச் சாலையைப் பயன்படுத்தியது.

போலந்தை விடுவிப்பதில் போலந்து இராணுவத்தின் யூனிட்டுகள் தீவிரப் பங்கேற்றன. போலந்து போர்வீரர்கள் உயர்வான போர்த் திறமையைக் காட்டினர், வீரத்தையும் ஆண்மையையும் வெளிப்படுத்தினர். போர்க்களங்களில் சோவியத், போலந்து போர்வீரர்களுக்கு இடையிலான வீரநட்பு வலுவடைந்தது.

போலந்து மக்கள் சோவியத் இராணுவத்தின் வீரச் செயலை உயர்வாக மதிக்கின்றனர். வார்ஸாவிலும் மற்ற போலந்து நகரங்களிலும் போலந்து பூமியைப் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிப்பதற்காக நடந்த சண்டைகளில் இன்னுயிர் ஈந்த சோவியத் போர் வீரர்களுக்காக மகத்தான நினைவுச் சினைங்கள் எழுப்பப்பட்டன.

வார்சாவில் சோவியத் வீரர்களுக்கான நினைவாலயம்



### கிழக்கு பிரஷ்யாவிலும் கிழக்கு பொமெரானியாவிலும் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் முறியடிப்பு

கிழக்கு பிரஷ்ய நடவடிக்கை (1945 ஜனவரி 13-ஏப்ரல் 25) இந்நடவடிக்கை 2-வது, 3-வது பைலோருஷ்ய சேனைகளின் துருப்புகளாலும் 1-வது பால்டிக் சேனையின் ஒரு பகுதியாலும் செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற்படையின் உதவியோடு நிறைவேற்றப்பட்டது. கிழக்கு பிரஷ்யாவிலும் போலந்தின் வடபகுதியிலும் பாசிச ஜேர்மனியத் துருப்புகளை முறியடிப்பதுதான் இதன் நோக்கமாகும்.

பாசிஸ்டுகள் கிழக்கு பிரஷ்யாவை எப்படியாவது தம்வசம் வைத்திருப்பதென முடிவு செய்தனர். இந்நோக்கத்தோடு அவர்கள் 6 பலப்படுத்தப் படைத் திரட்டு அமைக்கப்பட்டிருந்தது. ஜனவரி 26 முதல் வ்டக்கு படைத் தொகுதியாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட இதில் 1 டாங்கிப் படை, 2 போர்க்களப் படைகள் மற்றும் 1 வான்படை முதலியன அடங்கியிருந்தன. இவற்றில் மொத்தமாக 7,80,000 நபர்கள் இருந்தனர். இவர்களிடம் 8200 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 700 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்களும் 755 விமானங்களும் இருந்தன.

சோவியத் படைத் தலைமை இரண்டு பலத்த தாக்குதல்களைத் தொடுப்பதென முடிவு செய்தது. 3-வது பைலோருஷ்ய சேனையின் சக்திகளைக் கொண்டு மசூர் ஏரிகளுக்கு வடக்கே ஷ்தாலும் பென்னென் பிரதேசத்திலிருந்து இன்ஸ்தெர்புர்க் மற்றும் கேனிக்ஸ்பெர்க் திசையில் ஒரு தாக்குதலையும், 2-வது பைலோருஷ்ய சேனையின் துருப்புகளைக்கொண்டு மசூர் ஏரிகளுக்குத் தெற்கே ரஷான், செரோத்ஸ் தாக்குமுனைகளிலிருந்து மிலாவா, மரியென்புர்க் திசையில் இரண்டாவது தாக்குதலையும் தொடுக்கத் திட்டமிடப்பட்டது. இந்த இரண்டு தாக்குதல்களைத் தொடுப்பதன் மூலம் சென்டர் படைத் தொகுதியை வேர்மஹிடின் எஞ்சிய சக்திகளிடமிருந்து துண்டித்து, கடலோரமாக அதை நெருக்கி, தனித் தனிப் பகுதிகளாக அதைப் பிரித்து பின் பால்டிக் கப்பற்படையின் உதவியோடு அவற்றை பகுதி பகுதிகளாக ஒழித்துக் கட்டுவதென திட்டம் தீட்டப்பட்டது. சேனைகளின் தாக்குதல்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று 200 கி.மீ. களுக்கும் அதிகமான தொலைவில் தொடுக்கப்பட்டாலும் இவற்றின் நடவடிக்கைகள் மார்ஷல் வசிலேவ்ஸ்கியின் மூலம் உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகத்தால் கண்டிப்புடன் ஒத்திசைவிக்கப்பட்டன.

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்




ஜேர்மனியர்களின் ஜீதப் படுகொலை முகாம்களின் சுற்றுப்புறங்களிலிருந்து எடுக்கப்பட்ட கைபிடிமண் சேர்கக்கப்பட்ட நினைவுத்தாழி

பட்ட வட்டங்களுடன் பலத்த பல படை வரிசைகளைக் கொண்டு தற்காப்பை ஏற்படுத்தினர். சென்டர் படைத் தொகுதியைக் கொண்டு இப்

(தொடரும்)

# லண்டனில் மஹிந்த தங்கியிருந்த விடுதிக்குள் மர்ம நபர்கள் இருவர்?

## செயலாளர் வீரதுங்க அதிரடித் தகவல்



(கொழும்பு)

**இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது அவர் தங்கியிருந்த ஆடம்பர விடுதிக்குள் நுழைந்த மர்ம நபர்கள் தமது பாதுகாப்புப் பிரிவினரால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அதிரடித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போதே லலித் வீரதுங்க மேற்கண்டவாறு தகவலை வெளியிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,

ஜனாதிபதியின் லண்டன் பயணத்தின் போது பிரித்தானியப் பாதுகாப்புத்துறை குண்டு துளைக்காத நவீன வாகனங்கள், கூடுதலான பாதுகாப்பு அதிகாரிகள் என்று அவருக்கு உயரிய பாதுகாப்பை வழங்கியிருந்தது.

புலிகள், தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருந்தாலும் அங்கு தாராளமாகப் புலிக்கொடி ஏந்தியவர்கள் இருந்தனர். இதனை அந்நாட்டுப் பொலிஸார் கூடப் புதுமையாகப் பார்த்தனர்.

லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது மட்டுமன்றி ஜனாதிபதி தங்கியிருந்த ஆடம்பர விடுதிக்குள்ளும் இரண்டு பேர் இரகசியமாக நுழைந்தனர்.

எமது பாதுகாப்பு அதிகாரிகள்தான் அவர்களைக் கண்டுபிடித்தனர். அவ்வளவு மோசமான நிலைமை அங்கு இருந்தது. ஜனாதிபதி மஹிந்தவை பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் சந்தித்தபோது, இலங்கைக்கெதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் அவர் கவலையை வெளியிட்டார்.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் தமக்குப் புதிதானவையல்ல. அவற்றைவிட்டு விடுங்கள் என்று எமது ஜனாதிபதியும் பெருந்தன்மையுடன் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த லண்டனில் முக்கிய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். அடுத்த வருடம் பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் இவ்வாறான சந்திப்புகளில் அரச தலைமைகள் ஈடுபடுவது வழமைதான்.

எதிர்ப்புக்கள் இடம்பெற்றாலும் ஜனாதிபதியின் லண்டன் பயணம் வெற்றிகரமாகவே அமைந்தது என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# வர்த்தக நிலைய கட்டடங்களை திருத்த 10 கோடி ரூபா நிதியை இந்தியா ஒதுக்கியது

(கொழும்பு)

வடக்கே இறுதிக்கட்ட மோதல்கள் இடம்பெற்ற கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் போரினால் சேதமுற்ற வர்த்தக நிலைய கட்டடங்களைத் திருத்துவதற்கு 10 கோடி ரூபா நிதியுதவியை வழங்க இந்தியா முன்வந்திருக்கின்றது.

இலங்கை வணிகக் கைத்தொழில் ஒன்றியங்கள் சம்மேளனத்தின் முயற்சியையடுத்து இந்த நிதியுதவி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கவனிப்பாரற்றுள்ள வர்த்தக சமூகத்தினருக்கு உதவ வேண்டும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவிடம் விடுத்த வேண்டுகோளின்படியே இந்த நிதியுதவி கிடைத்திருப்பதாக வணிகக் கைத்தொழில் ஒன்றியங்கள் சம்மேளனத்தின் ஆலோசகரான மூத்த விரிவுரையாளர் டபிள்யூ.ஜே. சூசைரட்னம் தெரிவித்தார்.

எனினும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்குமாக இந்த நிதியுதவிக்கு விண்ணப்பிக்கப்படவில்லை என்றும் இதனால் முதற்தடவையில் உதவி கிடைக்காதவர்களுக்கு இரண்டாம் கட்டமாக உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கான இந்த உதவித்திட்டத்தில் இலங்கை அரசாங்கம் நேரடியாக பங்களிப்பு செய்யாத போதிலும் உதவித்திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்கி வருவதாக கூறப்படுகின்றது. (அ-2)

# ஆட்கடத்தலில் கேந்திரநிலையமாக இலங்கை பயன்படுத்தப்படுகின்றது

(கொழும்பு)

சர்வதேச ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கான கேந்திர நிலையமாக இலங்கை பயன்படுத்தப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கண்காணிப்பு மற்றும் விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஆட்கடத்தல்களுடன் தொடர்புடைய ஒருவர் கைதானதை அடுத்தே தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

கொழும்பிலும நீர்கொழும்பிலுமுள்ள ஹோட்டல்கள் சிலவற்றில் தங்கியிருந்த ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்த 27 பேர் இந்த சுற்றிவளைப்பின்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 22 பேர் ஆப்கானிஸ்தானை சேர்ந்தவர்கள் என இனங்காணப்பட்டுள்ளது.

அவர்களை இலங்கைக்கு அழைத்து வந்து மலேசியா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் ஊடாக அவுஸ்திரேலியா அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரியவந்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா கூறினார்.

(அ-2)

# பௌத்தமத மக்கள் மற்றவர்களின் உடைமைகளை பறிப்பவர்களல்ல

## ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

பௌத்தர்கள் மற்றவர்களது உடைமைகளைப் பறிப்பவர்கள் அல்லர். மாறாகத் தங்களது உடைமைகளை மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்ளும் கொள்கை கொண்டவர்களாவர் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி அஸ்கிரிய மகாவிகாரை மற்றும் அஸ்கிரிய பீடம் ஆகியவற்றை ஆரம்பித்து 700 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு நேற்று முன்தினம் கண்டி அஸ்கிரிய பீடத்தில் இடம்பெற்ற தேசிய வைபத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பௌத்தர்களும் பௌத்தமதமும் மற்றவர்களது உடைமைகளை அபகரிக்கும் தன்மையுடையனவர்களல்ல.மற்றவர்களுடன் தமது உடைமைகளைப் பங்கிட்டுக் கொள்ளும் மதம் எனலாம்.

இலங்கையில் மன்னராட்சி நிலைத்திருக்கவும் அதன்பின் எமது சுயாட்சி நிலைத்திருக்கவும் கௌதம புத்தரின் புனித தந்ததாது பாதுகாக்கப்பட வேண்டிய கட்டாயக் கடமை இருந்தது. இதை அஸ்கிரிய பீடம் பாதுகாத்து வந்தது.

அது மட்டுமல்ல இன்று கூட புனித தந்தத்தைப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் தங்கப் பேழையின் திறவுகோல் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வசமே உள்ளது.

700 வருட நிறைவை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை, ஞாபகார்த்த இலட்சினை, ஞாபகார்த்த கொடி, ஞாபகார்த்த கீதம் என்பன வெளியிடப்பட்டதுடன் ஞாபகார்த்த ஏழுமாடிகளைக் கொண்ட ஓய்வு விடுதி, ஞாபகார்த்த வீதி என்பனவும் திறந்து வைக்கப்பட்டன. (அ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெக்கணப்பாய் வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர் ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

இவ் உற்சவ தினங்களில்24 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் மறுநாள் பிற்பகல் 3.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பரத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் இடம்பெறும். 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தாசபை அறிவித்துள்ளது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருக மூர்த்தி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல்10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடை பெறவுள்ளதாக ஆலய அறங்காவற்சபை அறிவித்துள்ளது. (அ-9)

# அரசாங்கம் பொதுமக்கள் மீது வரிச்சுமையைக்கட்டிவிட்டுள்ளது

## கிரியெல்ல எம்.பி.சுட்டிக்காட்டு

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த வருமானத்தில்96வீதம்கடன்தவணை மற்றும் வட்டி கொடுப்பனவிற்காக செலவிடப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் 30 வீதம் மட்டுமே கடன் தவணை மற்றும் வட்டிக்கொடுப்பனவிற்கு செலுத்தப்பட்டது. வங்குரோத்து அடைந்துள்ள இந்த அரசாங்கம்பணம் இருக்கும் இடங்களில் பணம் பறிப்பதற்கு முயற்சிக்கின்றது.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி போன்றவற்றின் பணத்தைக் கொள்ளையடிக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. இன்று நாம் நுகரும் பல பொருட்களின் மீது அரசாங்கம் 70 வீத வரியை அறவீடு செய்கின்றது என லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# முள்ளிவாய்க்கால் எச்சங்களை அழிக்க சீனாவில் இருந்து நவீன திரவங்கள்!

## அரசின் கபடத்தனம் அம்பலமானது

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மனித எலும்புகளை உக்க வைப்பதற்கு சீனாவிலிருந்து திரவங்களை இலங்கை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

ஆனந்தபுரம் சாலை, புதுமாத்தளன்,மாத்தளன், இரட்டை முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம் உள்ளிட்ட பகுதிகளில் காணப்படும் எலும்புகளை உக்க வைப்பதற்கே இவை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது.

யுத்தம் முடிவுற்று மூன்றாண்டுகள் முடிவுற்ற நிலையில் மேற்படி பகுதியில் இன்னமும் தமிழ் மக்கள் மீளக்குடியமர்த்தப்படாத நிலையில் அங்கிருக்கும் போர் எச்சங்களையும் குறிப்பாக போர்க் குற்றம் தொடர்பான எச்சங்களையும் அழிக்கும் நோக்கிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே அப்பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் தோண்டி எடுக்கப்பட்டு வரும் நிலையில் அப்பகுதியை அங்குலம் அங்குலமாக இராணுவம் தோண்டி வருகின்ற நிலையிலேயே இச்செய்தியும் வெளியாகியுள்ளது.

அவர்கள் தோண்டும் குழிகளில் இருந்து மனித எச்சங்களும் வெளிவந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா, அனோமா பொன்சேகா ஆகியோர் நேற்று முன்தினம் மன்னார் மடு தேவாலயத்தில் பூசை வழிபாட்டில் ஈடுபட்டதையும் அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க, ஜயந்த கெட்டகொட ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## அலங்கார உற்சவம்

கூமாவடி புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திர் தேவஸ்தான அலங்கார உற்சவ்நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 26 ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 7.22 மணி தொடக்கம் 10.35 மணிவரை பூர்வாங்கக் கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து விஷேட அபிஷேக ஆராதனைகள், வசந்தமண்டபபூஜை,சுவாமி வீதியுலா வருதல் என்பன நடைபெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

## எயிட்ஸ் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

வவுனியா தெற்கு வலய ஆசிரியர்களுக்கு வலயக் கல்விப் பணிமனையில் எயிட்ஸ் தடுப்பு, போசாக்கு, சுகாதாரம் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வலயக்கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்செயலமர்வில் சுமார் 40 ஆசிரியர்கள் முதற்கட்டமாக கலந்து கொண்டிருந்தனர். இதன்போது எயிட்ஸ் நோயினை தடுப்பதற்கான வழிவகைகள், ஆரோக்கியமான வாழ்விற்கான போசாக்குணவு தொடர்பான விழிப்புணர்வு கருத்துக்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுகாதாரத்தின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துக்கள் வழங்கப்பட்டிருந்தது.

இச்செயலமர்வினை வலய சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் பொ. சண்முகவேதன், விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் இ. மாதவன், விஞ்ஞான களக்கற்கை நிலைய முகாமையாளர் அ. ஜெய்கீசன், மனைப்பொருளியல் ஆசிரிய ஆலோசகர் திருமதி. மா. புலேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கியிருந்தனர். (அ-7-266)

# கல்வியமைச்சரை வீட்டிற்கு அனுப்ப மக்கள் தயாராக இருக்க வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க

அதிபர், ஆசிரியர்களின் சேவை யாப்புக்களை உரிய தரப்பினருடன் கலந்தாலோசிக்காது திருத்தங்களை மேற்கொள்ள முனைவதை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற அதிபர், ஆசிரியர் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்ட போதே சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை பிறிதொரு செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க கல்வியமைச்சர் கல்வி கட்டமைப்பிற்கு பல நெருக்கடிகளை தோற்றுவித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி கல்வியமைச்சர் தமது பதவியில் இருந்து விலக வேண்டும். அண்மையில் இடம்பெற்ற பொலனறுவை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த கல்வியமைச்சர் பொலனறுவை, அனுராதபுரம் மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி தேவையில்லை என கூறியிருந்தார்.

அவர்களுக்கு சிறிதளவு உரம், நீர், எண்ணெய் என்பன இருந்தால் போதுமானது என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இதுவே கல்வியமைச்சரின் நோக்காக இருக்கின்றது. இது கல்வித்துறையை முழுமையாக வீழ்ச்சி பையச்செய்யும் ஒரு கூற்றாகும்.

இவ்வாறான ஒரு அமைச்சர் கல்வியமைச்சுக்கு பொருத்தமில்லாதவர். அவர் தொடர்ந்தும் இந்த ஆசனத்தில் இருக்க வேண்டுமா? இந்தக் கூற்றுக்கு அவர் பொறுப்புகூற வேண்டும். இந்த அமைச்சரை வீட்டிற்கு அனுப்புவதற்கு மக்கள் தயாராக வேண்டும் எனவும் இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க பொது மக்களிடம் கோரிக்கை விடுத்தார். (அ-2)

# போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்த கையெழுத்துவேட்டை

## கனேடிய தமிழர் பேரவை முன்னெடுப்பு

தமிழீழ மக்களிற்கான அரசியல் தீர்வை நிர்ணயிக்கும் சுயாதீன உலகப் போர்க் குற்ற விசாரணையையும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையையும் வலியுறுத்திக் கையெழுத்துத் திரட்டல் நிகழ்வை கனேடியத் தமிழர் தேசிய அவை மேற்கொண்டுள்ளது.

கையெழுத்துக்கள் கனடா வாழ் தமிழ் மக்களிடமும் பல்லின மக்களிடமும் சேகரிக்க கனேடியதமிழர் தேசிய அவை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அனைத்து மக்கள் வைகளுடனும் மற்றைய அமைப்புக்களுடனும் இணைந்து சர்வதேச அளவில் இக்கையெழுத்துத் திரட்டல் நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் அனைத்தும் தத்தம் நாட்டு அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் கையளிக்கப்படுவதுடன் அனைத்து நாட்டுத் தூதுவராலயங்களுக்கும் கையெழுத்துப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

ஈழ மண்ணில் போர்க் குற்றம் நடத்தியவர்கள் தண்டிக்கப்பட்டு ஈழத்தில் வாழும் தமிழ் மக்களிடமும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் பொது வாக்கெடுப்பு நடத்தி ஈழ மக்கள் தாங்கள்விரும்பும்ஆட்சியை அமைப்பதற்கான உரிமையை சர்வதேசம் வழங்க வேண்டுமெனக் கனேடியத் தமிழர் தேசிய அவை வேண்டி நிற்கின்றது.

ஒவ்வொருவரும் தவறாது இக்கையெழுத்துத் திரட்டல் வேலைத்திட்டத்தில் பங்கேற்று அதற்கு தங்களாலான முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறு கனேடியத் தமிழர் தேசிய அவை வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-2)

# சம்பந்தன் ஆற்றிய உரையின் மொழிபெயர்ப்பில் பிழை

## சிங்களக் கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு சுமந்திரன் எம்.பி பதில்

தமிழரசுக் கட்சியின் மாநாடு அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற போது அங்கு தலைவர் இரா. சம்பந்தன் ஆற்றிய உரையின் மொழி பெயர்ப்பில் ஏற்பட்ட பிழையே சிங்கள கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு காரணம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கான தீர்வு தேவை என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் தமிழர்களின் பிரஜைத்தை தமிழர்களே ஆள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். எனினும் சிங்கள தீவிரவாத கட்சிகள் சம்பந்தனின் தனித்தமிழீழத்தை இந்த உரையின் போது கோரியதாக குற்றம் சுமத்தி வருகின்றன. இது இலங்கையின் அரசியலமைப்புக்குமுரணானது என்றும் அந்தக் கட்சிகள் கூறுகின்றன.

இதன் காரணமாக சம்பந்தன் தமது உரையை மீளப் பெற வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சம்பந்தனின் உரை ஆங்கில மொழிபெயர்ப்பு பிழையானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமையில் சிங்கள இனவாதக் கட்சிகள் எவ்வாறு தமிழர்களுக்கு நியாயமான தீர்வை வழங்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

# ஆரம்பப்பிரிவு மாணவர்களின் சித்திரப்போட்டி முடிவுகள்

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைக்கு இடையே நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சித்திரப்போட்டி முடிவுகளை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சி. கணேசபாதம் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

தரம்-01

வி. அட்சயன்(வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி, செ. பிருதுவி (வவு/ சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), வே. மனோஜினி (வவு/பாவற்குளம் கலைமகள் வித்தி

தரம்-02

ந. மேனன் (வவு/பூந்தோட்டம் மகா வித்தி, சே. கார்னிகா (வவு/ இறம்பைக்குளம் மத்திய மகா வித்தி, ர. சதாஜ் (வவு/ தாருல் உலூம் (பூந்தோட்டம்) முஸ்லிம் வித்தியாலயம்)

தரம்-03

எவ். எம். ஷப்னி (வவு/ முஸ்லிம் மகா வித்தி, அ. தேவமனோகரி (வவு/ மகா இறம்பைக்குளம் அ.த.க. பாடசாலை), சோ. சினேஜன் (வவு/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தி

தரம்-04

செ. தனுஸ் (வவு/ இந்துக் கல்லூரி), யூ. அகாசி மரியகுரூஸ் (வவு/ இறம்பைக்குளம் மத்திய மகா வித்தி, ச.ஹிசாலினி (வவு/ விபுலானந்தாக் கல்லூரி)

தரம்-05

த. தர்சனா (வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி, தி. தஜிந்தா (வவு/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தி, ஐ. இன்சிபா (வவு/ முஸ்லிம் மகா வித்தி (அ-2-266)

# நிலத்திற்காக போராடும் முறிகண்டி மக்கள்


இன்று முறிகண்டி மக்களைப் போன்ற ஈழத்து மக்கள் விரும்புவதெல்லாம் இந்த அநீதியிலிருந்து நிலத்தைக் காப்பாற்றுவதையே; இந்த நிலத்தில் மறுக்கப்பட்ட வாழ்க்கையை மீட்டெடுக்க உதவுவதையே; இந்த மக்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி தியாகம் செய்வது? தாங்கள் வாழ்ந்த நிலத்தை எப்படி விட்டுக்கொடுப்பது? முறிகண்டியின் நினைவுகள், குளிர்ந்த புளிமரங்கள் நிறைந்த ஒருகால கட்டத்தை நினைவுபடுத்துகின்றன. அப்பொழுது யுத்தம் நடக்கவில்லை. இப்பொழுது முறிகண்டியில் இராணுவத்தினர் வசிக்கவில்லை. அப்பொழுது முறிகண்டியில் தமிழ் மக்கள் வசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு ஏழுவயதுச் சிறுவனாக முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தின் மடங்களில் ஓடித்திரிந்து விளையாடி இருக்கிறேன். முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் உடைக்கப்படும் தேங்காய்களை எண்ணியிருக்கிறேன். முறிகண்டிப்பிள்ளையார் கோவிலுக்கு வரும் பேரூந்துகளை அதிலிருந்து இறங்கும் சனங்களை எண்ணிக்கொண்டிருக்கிறேன். விறுவிறுப்பும் கலகலப்பும் கொண்டது அந்தக்காலம். அலையலையாக சனங்கள் வந்திறங்கி முறிகண்டிக் கோவிலை வணங்குவார்கள், கோவில் மடங்களிலெல்லாம் இளைப்பாறும் மனிதர்களுமாக அந்த இடம் செழித்திருந்தது.

எங்கள் வீட்டு அருகில்தான் முறிகண்டிப் பிள்ளையார் கோவில் பூசகரின் வீடு இருக்கிறது. பாடசாலை இல்லாத நாட்களில் பெரும்பாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் என்னை அவர் முறிகண்டிக் கோயிலுக்கு அழைத்துச் செல்வதுண்டு. தனது சைக்கிளின் முன்னால் என்னைத் தூக்கி ஏற்றிக் கொள்ளுவார். அல்லது ஷாலி மோட்டார் சைக்கிளின் பின்னால் என்னை ஏற்றிக் கொண்டு செல்வார். அந்த வயதில் முறிகண்டிப் பயணம் எனக்கு நெடும் பயணம்; அது எனக்கு சுற்றுலா. அன்று முறிகண்டிக் கோவில் கச்சானும் கோவிலில் உடைக்கும் தேங்காய் சொட்டுகளும் கோயில் பொங்கலுமே எனது உணவு.

முறிகண்டிப் பிள்ளையார் கோவிலை இறங்கி வணங்குவது மட்டும் அங்கு இடம் பெறும் விடயமில்லை. அந்தக் கோவிலைச் சுற்றி ஒரு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்து மக்களிடம் ஒரு வாழ்க்கை இருந்தது. முறிகண்டிப் பிள்ளையார் கோவிலுடன் ஏதாவது ஒரு வகையில் அவர்கள் தொடர்புபட்டிருந்தார்கள். அல்லது கோவிலுக்கு வருபவர்களுடன் அல்லது கோவிலில் வேலை செய்பவர்களுடன் அந்தக் கிராமத்திற்குள் நுழையும்பொழுது அந்தக்கிராமத்தைப் பார்த்திருக்கிறேன். அவர்களை கோவிலில் பார்க்கக்கூடும். காடும் வயலும் மேடும் குளமும் என்று முறிகண்டி தரும் அனுபவமும் வாசனையும் வித்தியாசமானது. இப்படியாக அந்தக் கிராமத்தில் ஒரு வாழ்க்கை இருந்தது.


அங்கு வசித்த மக்களில் பெரும்பாலானவர்கள் தெற்கில் இடம்பெற்ற இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். முத்து என்ற சிறுவன் கோவில் சூழலில் கடகம் ஒன்றில் சொப்பிங் பைகளில் அடைக்கப்பட்ட கச்சான் பொதிகளை விற்க வருவான் அவருடன் பேசிக் கொண்டிருப்பதும் முறிகண்டி ஆலயத்து மடங்களில் இளைப்பாறும் முதியவர் களுடன் ஏதாவது பேசிக்கொண்டிருப்பதும் இன்னும் நினைவில் ஆடுகின்றன. கோவிலில் உடைக்கப்படும் தேங்காய்களை கொப்பறாவாக்கி அதை செக்கிற்கு அனுப்பும் வேலைகள், பெரும் மண்டபங்களில் நடந்து



கொண்டிருக்கும். தேங்காய் சிதறல்கள் பெரும் குவியல்களாகக் குவிக்கப் பட்டிருக்கும்.

1996 இற்குப் பின்னர் சத்ஜெய, ஜெயசிக்குறு காலத்தில் முறிகண்டி சனங்கள் அற்றுப்போனது. கிளிநொச்சியிலும் மாங்குளத்திலும் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பொழுதும் முறிகண்டி விடுதலைப் புலிகளின் வசம் இருந்தது. மாங்குளம் வீழ்ச்சியடைய முன்பு மக்கள் பெயர்ந்து சென்ற முறிகண்டி வழியாக மல்லாவிக்கு சென்றிருக்கிறேன். கிளிநொச்சியிலும் மாங்குளத்திலும் இராணுவம் நிலைகொண்டிருந்த பொழுது சில நாட்கள் முறிகண்டியில் உறவினர் வீட்டில் தங்கியிருந்தேன். இரண்டு பாகங்களாலும் செல்கள் வந்து வீழ்ந்து கொண்டிருந்த எதிர்பாராத தருணங்களில் தாக்குதல் மூண்டிருந்தன.

இறுதியாக நடந்த வன்னி யுத்தம் முறிகண்டியின் வசந்தத்தை அழித்து விட்டது. அது கிழக்கு மக்களை இன்றளவும் பிரித்திருக்கிறது. முறிகண்



டிக்கோவிலை அண்டிய பகுதியில் கடும் யுத்தம் நடந்தது. கோவிலைக்கைப் பற்றியவுடன் அதனை உறுதிப்படுத்தும் வகையில் அரச இணையத்தளம் புகைப் படங்களை வெளியிட்டது. முறிகண்டிக் கோவிலின் கோபுரங்களில் சிங்கக் கொடிகள் பறந்தன. கோவிலிலும் அதனைச்சூழ இருந்த பகுதிகளும் சிதைந்திருந்தன. முறிகண்டிப்பகுதியை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்ற, கடுமையான சண்டைகளில் இராணுவம் ஈடுபட்டது.

இராணுவத்தை முன்னேறவிடாமல் தமது எல்லைப்பகுதியை இறுக்கமாக அமைத்து சண்டையிட்ட விடுதலைப் புலிகள் அப்பகுதியை விட்டு பின்வாங்கினார்கள். அதற்குச் சிலநாட்களின் முன் அப்பகுதியிலிருந்து சனங்கள் பின்வாங்கினார்கள். புலிகள் அன்று அந்த நிலத்தை விட்டு பின்வாங்கியதோடு அந்த மக்கள் நிலத்தை ஆபத்தான தரப்பிடம் இழந்தார்கள். இராணுவம் வெற்றிக் களிப்பில் மிதந்தது. அன்றைய வெற்றிக் களிப்பு அறிவிப்புகளின், கொண்டாட்டங்களின் பலனாக இன்றுவரை அந்த மக்கள் நிலமிழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏ-9 வழியாக போக்குவரத்துகள் ஆரம்பிக்கப்பட்ட பொழுது முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் முதன் முதலில் இறங்கிப் பார்த்தேன். அப்பொழுது ஏ-9 பாதையில் எங்குமே இறங்க அனுமதிக்கப்படவில்லை. பின்னொருநாள் முறிகண்டி பிள்ளையார் கோவிலில் இறங்க அனுமதிக்கப்பட்டிருந்தது. அந்தக் கோவில் மணியை எத்தனையோ தடவை அசைத்திருக்கிறேன். அந்த மணிக் கோபுரம் செல்கள் பட்டுக் காயப்பட்டிருந்தது. மடங்கள், மரங்கள் எல்லாமே ஆட்கள் அற்றிருந்தது. கோவிலின் கூரையில் குண்டுகள் ஓட்டை போட்டிருந்தன. முறிகண்டி கிராமத்தில் ஆட்களைக் காணவில்லை. எப்படி களையாய் இருந்த கோவில், பாழடைந்திருந்திருந்தது. முறிகண்டி பிள்ளையார் கோவிலை இரண்டாவது முறை யுத்தம் சிதைத்த கோலத்தில் பார்த்தேன்.

> ‘எங்களுடைய பிரச்சினையை சிங்கள மக்களுக்கு சொல்லுங்கள் அவர்கள் அரசாங்கத்தை தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாடுகிறார்கள்’
> -தடுப்புமுகாமில் இருக்கும் முறிகண்டி மக்கள்

முறிகண்டியில் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு முன்பாகவே கோவிலின் அதிகாரத்தை கைப்பற்றி விட்டார்கள். காலம் காலமாக கோவிலை பராமரித்து வந்தவரிடமிருந்து அந்த உரிமத்தைப் பறித்த பொழுது அவர் நீதிமன்றம் சென்றார். கோவில் நிர்வாகத்தை அப்பகுதி மக்களிடம் கொடுக்காமல் இந்துசமய அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டு வந்தார்கள். இந்தக் கோவிலை எதற்காக இப்படி அமைச்சின்கீழ் கொண்டு வந்தார்கள்? அந்தக் கோவிலின் வருமானம், அதன் ஆளுகை மட்டுமல்ல அப்பிர தேசத்தை முழுமையாக ஆக்கிரமிக்கவே அவ்வாறு நடைபெற்றது. அந்தக் கோவிலின் அப்பகுதியின் முக்கியத்துவம் கருதி அதனை அபகரிக்க இவ்வாறு நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதே கோவிலின் சூழலில் அப்பகுதி மக்களை நிலமற்ற அகதிகளாகப் பார்த்தபொழுது எங்கள் இனத்தின் பரிதாப நிலையின் துயரம் அப்பட்டமாய் தெரிகிறது. எப்பொழுது எங்கள் நிலத்தில் வாழ்வோம் என்ற ஏக்கத்துடன் எங்கள் நிலம் எமக்கு வேண்டும் என்ற கொதிப்புடன் அவர்கள் திரிந்து கொண்டிருந்தார்கள். நிலம் இழந்த இந்த மக்களின் குரல்கள் மிகவும் உக்கிரமாக ஒலிக்கின்றன. நிலத்தை ஆக்கிரமித்தவர்களை நோக்கியும் சிங்கள மக்களை நோக்கியும் உலக சமூகத்தை நோக்கியும் இந்த சனங்களின் குரல்கள் நீளுகின்றன. நில ஆக்கிரமிப்பு யுத்தம் இந்த மக்களை இந்த நிலைக்கு தள்ளியிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முறிகண்டி கிழக்கு என்ற கிராமத்தில் தான் இந்தப்பிரச்சினை நடக்கிறது. முன்பாக மேற்குப் பகுதியில் மீள்குடியேற்றப்படாத மக்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டு போராட்டங்களை நடத்தி குரல் எழுப்பியதைத் தொடர்ந்து அந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டார்கள். இப்பொழுது கிழக்குப் பகுதி மக்களின் காணி நிலங்களை அந்த மக்களிடம் கையளிக்க தயங்கும் நிலையில் அந்த நிலப்பகுதிகள் இராணுவத்தின் பாசறைகளாக தங்குமிடங்களாக மாறியுள்ளன. இந்த மக்களின் காணி நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன என்றும் அதை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் யுத்தம் முடிவடைந்தவுடனேயே குரல்கள் எழுந்தன.

**தமிழ் மாறன்**

அப்பகுதியில் இராணுவத்தினர் தங்குவதற்கான சீனக் குளிர் வீடுகள் அமைப்பதற்கு தளவாடங்கள் தெருவிலேயே வைக்கப்பட்டிருந்தன. இதையடுத்து உள்நாட்டு ஊடகங்களும் சில வெளிநாட்டு ஊடகங்களும் இந்த மக்களின் நிலத்திற்கு ஆபத்து நேர்ந்தது பற்றி செய்திகள் வெளியிட்டன. இராணுவத்தினரின் குடும்பங்களைக் குடியேற்றவே ஏற்பாடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. அத்துடன் முறிகண்டி ஆலயத்தின் முன்னைய பகுதியிலிருந்து கொக்குவில் வரையான கிழக்குப்பக்கமான காடு களுக்குள் அகன்ற பாதைகள் செல்லு கின்றன. அவ்வாறு செல்லும் பாதை கள் இராணுவத்தினரின் புதிய கிராமத்தை நோக்கிச் செல்லுகின்றனவா? அங்கு என்ன நடக்கி ன்றது என்று பலத்த கேள்விகளும் சந்தேகங்களும் உருவாக்கியுள்ளன.

(தொடரும்)

# வடக்கு மண்ணை தெற்கின் அடிமை பிரதேசமாக மாற்றுவதே அரசின் நோக்கம்

## விளைவு விபரீதமாகும் என எச்சரிக்கை விடுக்கிறார் விக்ரமபாகு

(கொழும்பு)

**தமிழர் தாயக பூமியான வடக்கு பிரதேசத்தை அடிமைகள் வாழும் பிரதேசமாக மாற்றியமைப்பதற்கே அரசு இராணுவத்தை ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கின்றது என குற்றஞ் சாட்டியுள்ள நவசமசமாஜ கட்சி, தமிழர்களின் பொறுமையை இந்தப் பேரினவாத அரசு சோதிக்குமானால் விளைவுகள் விபரீதமாகும் என்றும் எச்சரித்துள்ளது.**

யாழ்.குடாநாட்டில் இராணுவம் திட்டமிட்ட அடிப்படையில் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மயான பூமியையும் ஆக்கிரமித்து அங்கு பௌத்த கொடியை நிலைநாட்டி சிங்கள தேசம் என்ற இனவாத மந்திரத்தை ஓதி நாட்டை சிங்கள மயமாக்குவதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது. தங்களின் உரிமைகளை கோரி போராடிய தமிழர்களைக் கொன்று குவித்த இந்த அரசு தமிழினத்தின் தனித்துவ சின்னங்களையும் அழித்து வருகின்றது.

தமிழர்கள் தங்களின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு சாத்வீக வழியில் போராடினர். காந்திய வழியை பின்பற்றினர். ஆனால், சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழர்களை அடக்குவதற்கு முயற்சித்ததே தவிர உரிமைகளை வழங்குவதற்கு முன்வரவில்லை.

அதன்பின்னர் உருவான ஆயுதப் போராட்டத்தால் பாரிய இழப்புகள் ஏற்பட்டன. முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழர்கள் கொத்துக்கொத்தாக கொன்று குவிக்கப்பட்டனர். அரசியல் நலன்களுக்காக விலைமதிக்க முடியாத உயிர்களைக் கூட சர்வதேச சமூகம் கருத்திற் கொள்ளவில்லை. இவ்வாறு பல இன்னல்களை சந்தித்த பின்னரும் கூட தமிழர்களின் துயரங்கள், அவல நிலைமைகள் தீரவில்லை.

அனைத்தையும் இழந்து நடைப்பிணங்களாய் வாழும் வடக்கு மக்களுக்கு தற்போது இருக்கும் ஒரே சொத்து அவர்களது காணிகளாகும். அதைக்கூட இராணுவம் பறிப்பதற்கு முயற்சிக்கின்றது.

தமிழீழம் என்றொரு நாட்டை கைப்பற்றி விட்டோம் என்ற ஆவணப் போக்கிலேயே அரசு செயற்படுகின்றது. ஒரு நாட்டை இன்னுமொரு நாட்டின் இராணுவம் கைப்பற்றிய பின்னர் அந்த நாட்டின் நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்து கொள்ளும். அதைத்தான் தற்போது இலங்கை இராணுவம் வடக்கில்




செய்கின்றது. இனியும் செய்யப்போகின்றது.

தமிழர்கள் இனியும் இல்லையென்ற அளவு பொறுமை காத்து வருகின்றனர். ஆனால், இந்த அரசு அவர்களை சீண்டிவிட்டு போராட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றது. வடக்கு மண்ணை தெற்கின் அடிமை பிரதேசமாக மாற்றியமைப்பதே மஹிந்த அரசின் சிந்தனையாகும் என்றார். (அ-2)

# புலம்பெயர் தமிழரின் அச்சுறுத்தலுக்கு நாம் ஏன் பயப்பட வேண்டும்?

## சஜின் வாஸ் குணவர்த்தன ஆவேசம்!



புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களால் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களுக்கு அடிபணிவதா என்று சிந்திக்க வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதுகெலும்புடன் செயற்பட்டு வருகிறார். நாமும் அப்படித்தான் செயற்படுகிறோம். நாம்எதற்கு பயப்படவேண்டும்.

என ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன காரசாரமாக கருத்து வெளியிட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது அவர் மேலும் கூறியவை வருமாறு, புலம்பெயர் புலிகள் கொடுத்து வரும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிவதா என்ற கேள்வி எம்முன் எழுந்துள்ளது. அதனை உடனடியாக தீர்மானிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது.ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் சென்ற போது புலம்பெயர் புலிகள் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் நீதியான ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவில்லை.

ஜனாதிபதிக்கும் இலங்கைக்கும் எதிராக நடத்தப்பட்ட இவ்வாறான எதிர்ப்புச் செயற்பாடுகள் எதிர்காலத்தில் பிரித்தானிய அரசுக்கு எதிராகவும் வரலாம். இவ்வாறான செயற்பாடுகளின் பின்னணியில் உள்ள பயங்கரமான நிலையை பிரித்தானிய பாதுகாப்பு துறையினர் நன்கு உணர்ந்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். அவரை எவராலும் கட்டுப்படுத்த முடியாது.மூன்று தசாப்தகால யுத்தத்தை நிறைவு செய்துவிட்டு நாம் அடுத்த கட்ட செயற்பாடுகளுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கையில் நாங்கள் ஏன் பயப்படவேண்டும்? புலம்பெயர் புலிகளுக்கு தலை வணங்குவதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டியுள்ளது. எவருக்கும் அச்சப்படப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன ஆவேசத்துடன் தெரிவித்துள்ளார். (அ-2)

## குறைநிறைகளை தெரியப்படுத்துங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் வினைத்திறனான மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கும் சேவைகளை துரிதப்படுத்தி நிறைவேற்றுவதற்கும் பொதுமக்கள் குறைகேள் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்:மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் தமது குறைகள், முறைப்பாடுகளை 021 222 2335 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ imccomplaint@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி யினூடாகவோ தெரியப்படுத்திக் கொள்ள முடியும் என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார்.(அ-9)

# சுண்டிக்குளம் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள்

## கடல்வளம் பாதிக்கப்படுவதாக சுண்டிக்குளம் மீனவர்கள் கவலை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக சுண்டிக்குளம் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுண்டிக்குளம் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்படாத இடங்களில் தென்னிலங்கை மீனவர்கள்தங்கி நின்று டைனமோக்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். தினமும் 2 ஆயிரம் கிலோகிராமிற்கு மேற்பட்ட மீன்கள் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஒரு பிரதேச மீனவர்கள் ஏனைய பிரதேசங்களுக்குள் அனுமதிப்பத்திரம் இன்றி (பாஸ் நடைமுறை) அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட முடியாது என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தடை செய்யப்பட்ட மருந்துகளை பயன்படுத்தி தென்னிலங்கை மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். இதனால் அப்பிரதேச கடல்வளம் முற்றாக அழியும் நிலைமை உள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இவ்விடயத்தில் படையினர் அக்கறையுடன் செயற்படாது கண்டும் காணாதது போல் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-9-24)

# இரத்த வங்கி பிரிவினரால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப்பிரிவினரால் இரத்ததானமும் அதற்கான தேவைகளும் சம்பந்தமான போட்டிகள் பாடசாலை, திறந்த போட்டிகளாக அண்மையில் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் வெற்றியீட்டியோரது பெயர் விபரங்களை யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களது பெயர் விபரம் வருமாறு,

**சிறுகதைப்பேட்டி**

**பாடசாலைமட்டம்**

லூட்ஸ் பூரணி மரியநாயகம் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), அன்ரனி டஸ்ரன் அன்ரனி றொபின்ஸ்ரன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), கலாநிதி பொன்மாறன் (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**திறந்த பிரிவு**

நிலானி சுந்தரமூர்த்தி (யா/தேசிய கல்வியியற் கல்லூரி), திருமதி மாலாதேவி மதிவதனன், காயத்திரி மத்தியூஸ் (யா/தேசிய கல்வியியற் கல்லூரி)

**சித்திரப்போட்டி**

**திறந்தபிரிவு**

ஞானராஜா மனோவா (தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), வித்தியா இரத்தினேஸ்வரன்,சூசைமுத்து பரம்சோதி (யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

**பாடசாலைமட்டம்**

கலைச்செல்வன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), மரியதாசன் கிறிஸ்ரின்கனுலா (யா/திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை), து.உதயகுமாரன் ராம்கி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

**கவிதைப்போட்டி**

**திறந்தபிரிவு**

திருமதி மாலாதேவி மதிவதனன் (மாங்குளியன்வளவு அளவெட்டி மத்தி அளவெட்டி), பொன்னையா சகலகலாநிதி (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), கார்த்திகேசு தவராஜ சுந்தரம் (புதுமுறிப்பு, உருத்திரபுரம், கிளிநொச்சி)

**பாடசாலை மட்டம்**


கௌதமி கதிரவேலு (யா/விக்னேஸ்வரா கல்லூரி), எஸ் கலைமதி (யா/ விக்ரோறியா கல்லூரி),சிந்துஜன் சக்திஜீவன் (யா/ புனித பத்திரிசியார் கல்லூரி). (அ-7)



# சிறுவர் அரங்கம்

131

## ஓடிப்போன வேடர்கள்



அது ஒரு சிறிய கிராமம். அந்தக் கிராமத்தில் சில வீடுகளே இருந்தன. அந்தக் கிராமத்திற்கு மத்தியில் ஒரு பெரிய கோயில் இருந்தது. அந்தக் கோயில் கோபுரத்தில் ஏராளமாய்ப் புறாக்கள் வசித்து வந்தன.

அந்தக் கோயிலுக்கு வெளியே ஒரு பெரிய அரச மரம் இருந்தது. அந்த அரச மரத்தில் சில காகங்கள் கூடு கட்டி வசித்து வந்தன.

அன்று காலை கோயிலை ஒட்டியிருந்த ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண்மணி காகத்தைக் கூவி அழைத்து பழைய சாதத்தை தெருவில் கொட்டினாள். இதைக் கவனித்த ஒரு காகம் உடனே குரல் கொடுத்தது. காகத்தின் குரலைக் கேட்டதும் நான்கு திசைகளிலிருந்தும் காகங்கள் அங்கே வந்தன.

எல்லா காகங்களும் ஒன்றாய் சேர்ந்து கிடைத்த உணவை பங்கு போட்டுச் சாப்பிட்டன.

அதை அந்தப் பகுதியிலிருந்த ஒரு புறா கவனித்துக் கொண்டிருந்தது.

உணவைச் சாப்பிட்டு மரத்தில் அமர்ந்திருந்த காகத்திடம் அந்தப் புறா சென்றது.

ஆமா எல்லாரும் எப்பவும் ஏன் ஒண்ணாவே சாப்பிடறீங்க. யாருக்குக் கிடைக்குதோ அவங்க மட்டும் சாப்பிட்டுட்டு மீதியிருந்தா பத்திரப்படுத்தி வெச்சிருந்து அப்புறம் சாப்பிடலாமில்லியா?

கிடைக்கிற உணவை பங்கு போட்டு சாப்பிடறது தான் எப்பவும் நல்லது. அப்பதான் நமக்குள்ளே அன்பும் ஒற்றுமை உணர்ச்சியும் வளரும்.

ஆனால், காகம் சொன்ன இந்தக் கருத்தை அந்தப் புறா ஏற்றுக் கொள்ளவில்லை.

சரி, கொஞ்சமா கிடைச்சா என்ன பண்ணுவீங்க?

எவ்வளவு கொஞ்சமா கிடைச்சாலும் சரி, கிடைச்சதை நாங்க எல்லாரும் சமமா பங்கு போட்டு சாப்பிடுவோம். நிறையக் கிடைச்சாலும் அதையும் சமமா பங்கு போட்டு சாப்பிடுவோம்.

சில நாட்கள் சென்றன.

அந்தக் கிராமத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊரிலிருந்து சில வேடர்கள் வந்தார்கள்.

உண்டிவில்லால் அவர்கள் கோயில் மதில் சுவரின் பொந்துக்குள் இருந்த புறாக்களை நோக்கி கற்களால் அடிக்க ஆரம்பித்தார்கள். அனுபவம் வாய்ந்த வேடர்களின் குறி தப்பவில்லை. உண்டிவில்லில் இருந்து



புறப்பட்ட கற்கள் புறாக்களைத் தாக்கின. அதில் இரண்டு புறாக்கள் அடிபட்டு கீழே விழுந்தன. அவர்கள் உண்டிவில் மூலம் எறிந்த கல் ஒரு காகத்தின் மீது பட்டு அதுவும் கீழே விழுந்தது.

இதைக் கவனித்த மற்றொரு காகம் உடனே குரல் கொடுத்தது. அதன் குரலைக் கேட்டு அந்தப் பகுதியிலிருந்த அனைத்துக் காகங்களும் அங்கே உடனே வந்தன.

அடிபட்டுக் கீழே கிடந்த காகத்தைப் பார்த்து அவை கோபமடைந்தன. அவை ஆக்ரோஷமாக அந்த வேடர்களைச் சூழ்ந்து கொண்டு அவர்களைக் கொத்த ஆரம்பித்தன. காகங்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத அந்த வேடர்கள் வலியால் கத்திக் கொண்டே அந்த இடத்தில் இருந்து ஓடிப் போனார்கள்.

காகங்களின் இந்தச் செயலால் புறாக்கள் தப்பின. அடிபட்டுக் கீழே விழுந்த புறாக்களை ஏனைய புறாக்கள் காப்பாற்றின.

இப்போது கூட்டத்திலிருந்து அந்தப் புறா காகத்திடம் அன்பான குரலில் பேசியது.

ஒற்றுமை எவ்வளவு சக்தி வாய்ந்ததுன்னு இன்னைக்கு நான் உங்க மூலமா புரிஞ்சிகிட்டேன். அன்னைக்குச் சொன்னது சரிதான். இனி நான் கூட ஏனைய புறாக்கள் கிட்டே ஒற்றுமையைப் பத்தி எடுத்துச் சொல்றேன்.

இதைக் கேட்ட காகம் மகிழ்ச்சி அடைந்தது.

## நரியின் அறிவுரை

## அம்புலி மாமா கதைகள்



காட்டில் இரு மான்கள் புல் மேய்ந்து கொண்டிருந்தன. அந்த இடத்திற்கு அருகில் ஓர் அழகிய நீர்வீழ்ச்சி நீரைக் காற்றில் வாரி இறைத்துக் கொண்டிருந்தது. விலங்குகளுக்கு அந்த நீர்வீழ்ச்சி தான் குளிக்கும் இடம். நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஓடும் தண்ணீரை விலங்குகள், பறவைகள் போன்றவை குளிக்கவும் குடிக்கவும் பயன்படுத்திக் கொள்ளும்.

யானைகள் அந்த நீர்வீழ்ச்சிக்கு தினமும் கூட்டமாய் வந்து குளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தன. துதிக்கையில் தண்ணீரை உறிஞ்சி தன் மீதும் உடன் இருக்கும் யானைகள் மீதும் வாரி இறைத்து விளையாடுவது பார்க்க சந்தோசமாய் இருக்கும்.

மான்கள் புல் மேய்ந்து கொண்டிருக்கையில் ஒரு நரி அங்கே வந்தது.

வந்த நரி சும்மா இருக்காமல் மான்களை வம்புக்கு இழுத்தது.

உங்களைப் பார்த்தா ரொம்ப பாவமா இருக்கு.

எதுக்கு?

எப்ப பார்த்தாலும் இந்தப் புல்லையே தின்னுகிட்டிருக்கீங்களே. அதான்.

இது தான் நாங்க விரும்பி சாப்பிடற உணவு. இது எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. நீ எங்களைப் பார்த்துப் பரிதாபப்பட வேணாம்.

எங்களைப் பாரு. தினமும் ஒவ்வொரு வகையான மாமிசத்தைச் சாப்பிடறோம். நீங்களும் எங்களை மாதிரி மாமிசம் சாப்பிடக் கத்துக்கிட்டா என்ன?

மான்கள் இரண்டும் முகத்தைச் சுளித்தன.

மாமிசம் சாப்பிடறது ரொம்பப் பாவம். நீ முதல்ல இந்த இடத்திலே இருந்து போயிடு.

இதைக் கேட்ட நரி சிரித்தது.

இதுல என்ன பாவம் இருக்குன்னு எனக்குத் தெரியலே.

ஒரு உயிரைக் கொன்னு அதை நாம சாப்பிடறது எவ்வளவு பாவம் தெரியுமா? அதைக் கொல்லும் போது அதோட மனசும் அதோட அம்மா மனசும் எவ்வளவு கஷ்ரப்படும்னு கொஞ்சம் யோசிச்சுப் பாரு. அப்ப உனக்குப் புரியும்.

சரி சரி உங்ககிட்ட பேசறதுலே ஒரு உபயோகமும் இல்லே. நான் புறப்படறேன்.

இங்கிருந்து புறப்பட்ட நரி வழியில் கன்றுக் குட்டிகளைச் சந்தித்தது.

மான்களிடம் சொன்னது போலவே கன்றுக் குட்டிகளிடமும் மாமிசத்தைச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தியது நரி.

கன்றுக்குட்டிகளும் மான்கள் சொன்னது போலவே மாமிசம் சாப்பிடுவது தவறு என்று சொல்லிற்று.

நரி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

அடுத்த நாள் மான்களும் கன்றுக்குட்டிகளும் சந்தித்துக் கொண்டன.

நேற்று நரியைப் பார்த்தோம். அது உங்க



ளை மாமிசத்தைச் சாப்பிடச் சொல்லிச் சொல்லிச்சு.

இதைச் சொன்ன கன்றுக் குட்டிகளிடம் மான்கள் கேட்டன..

அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?

முடியாதுன்னு சொல்லிட்டோம். ஆனா அது சொல்றதும் சரின்னுதான் தோணுது. நாமும் மாமிசத்தைச் சாப்பிட்டுப் பார்த்தா என்ன?

நீங்க சொல்றது ரொம்பத் தப்பு. நாம் ஒரு நாளும் அது மாதிரி நினைக்கக் கூடாது. யானையும் நம்மளை மாதிரி ஒரு விலங்கு தான். அது மாமிசம் சாப்பிட ஆரம்பிச்சா என்னாகும்னு யோசிச்சுப் பாரு. இந்தக் கானகமே காலியாகிடும். ஒரு உயிரும் மிஞ்சாது. கடவுள் எல்லாத்தையும் சரியாத் தான் படைச்சிருக்காரு.

மான்களின் பேச்சு கன்றுக்குட்டிகளின் மன்சைத் தெளிவடையச் செய்தது. அவை மான்களிடம் வருத்தம் தெரிவித்தன.

சில நாட்கள் சென்றன.

நரி வேகமாய் ஓடி வந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த மான் அதை நிறுத்தி விசாரித்தது.

என்னோட குட்டியைக் காணோம். எங்க தேடியும் கிடைக்கலை. அதான் தேடிப் போய்க்கிட்டிருக்கேன்.

சரி, வா. நானும் உன்கூட வர்றேன். நாம ரெண்டு பேரும் சேர்ந்து தேடலாம்.

நரியும் மானும் சேர்ந்து நரிக்குட்டியைத் தேடின. நீண்ட நேர தேடுதலுக்குப் பின்னர் ஓர் இடத்தில் நரிக்குட்டி இறந்து கிடந்ததைப் பார்த்தன. அதை ஓர் காட்டுப் பன்றி தின்று கொண்டிருந்தது.

நரியும் மானும் வருவதைப் பார்த்த காட்டுப் பன்றி ஓடிப்போனது.

தன் குட்டி இறந்துபோய்க் கிடப்பதைப் பார்த்த நரி அழ ஆரம்பித்தது. மான் அதற்கு ஆறுதல் சொல்லி நரியைத் தன்னுடன் அழைத்துச் சென்றது.

இனி நரி யாரையும் மாமிசம் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தாது.

NDB Savings Star Plus

இப்போது

# சேமிப்பு கணக்குகளுக்கும்

# 10%*

# அதி உயர் வட்டியைத் தருவது NDB

(சு/267)

சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு சேமிப்பு கணக்குகளுக்கும் அதிக வட்டியைத் தருவது, சேமிக்க சில வழிகளைச் சொல்லித் தந்த NDB.

அழையுங்கள் 011 2 448 888

PHOENIX O&M

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. வ.செ.வ. 10.47%

நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.






சேமிப்போம் - செயற்படுவோம் - நாட்டை மேம்படுத்துவோம்

வாழ்க்கையை நிதமும் மாற்றும்

NDB வங்கி

# வைத்தியர் ஜெயக்குமார் வீட்டு தாக்குதல் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்தியர் என். ஜெயக்குமார் வீட்டின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் தாக்குல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் அரசடி வீதியில் உள்ள அவரது வீட்டிற்கு அதிகாலை 1.15 மணியளவில் சென்ற நபர்களினால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டின் 13 யன்னல் கண்ணாடிகள் அடித்து உடைக்கப்பட்டுள்ளதோடு கழிவு ஓயிலை உடைக்கப்பட்ட யன்னல் ஊடாக ஊற்றி விட்டுச் சென்றுள்ளனர்.

அத்தோடு தேசத்துரோகிகளுக்கு இது தான் நிலையென எழுதப்பட்டிருந்த அட்டைகள் இரண்டினையும் வீட்டிற்குள் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

யன்னலூடாக சொப்பின் பைகளில் நிரப்பப்பட்டிருந்த கழிவு ஓயிலை வீட்டினுள் போட்டிருந்தனர். இதனால் வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்தும் கழிவு ஓயிலில் தோய்ந்தன.

பெறுமதியான பல புத்தகங்கள், நினைவுப்பரிசில்கள், தளபாடங்கள், சுவாமிப்படங்கள் என்பனவும் சேதமாகின.

அத்தோடு வீட்டினுள்ளும் வெளிச்சுவரினுள்ளும் வீசப்பட்டிருந்த கழிவு ஓயிலை அகற்றுவதற்கு பல நாட்கள் தேவைப்படும் என அங்கு கூடியிருந்தவர்கள் பேசிக்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். வைத்தியர் ஜெயக்குமாரிடம் சம்பவம் தொடர்பாகக் கேட்டறிந்து முறைப்பாட்டையும் பொலிஸார் பதிவுசெய்திருந்தனர்.

இதேவேளை, தடயங்களையும் பரிசோதனை செய்ததோடு தடயப்பொருட்களையும் மீட்டனர். இச்சம்பவம் தொடர்பாக வைத்தியர் ஜெயக்குமார் தெரிவிக்கையில்,

நள்ளிரவு வேளை என்பதால் எனது வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்களை இனங்காணமுடியவில்லை. அத்தோ்டு அவர்களின் தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக நாம் கூக்குரலிட்டோம். இதனால் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

அதிகாலை 1.15 மணியளவில் வீட்டின் யன்னல் கண்ணாடிகள் உடைக்கும் சத்தம் கேட்டது. பின்பு கழிவு ஓயிலையும் அதனூடாக ஊற்றினார்கள் என்றார். (அ-6)

# தாக்குதலுடன் தொடர்புடையவர்களை விரைவில் கைது செய்ய வேண்டும்

## அல்லது போராட்டம் தொடரும்; வைத்தியர்கள் எச்சரிக்கை




புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமாரின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தினை கண்டித்து யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியரான ஜெயக்குமார் வீட்டின் மீது நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்தே வைத்தியர்கள் நேற்றுக் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு முன்னதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள மருத்துவர்கள் விடுதியில் ஒன்று கூடிய இவர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது என முடிவெடுத்ததன் பிரகாரமே இப்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இப்போராட்டத்தில் நிறைவு காண் மருத்துவ சங்கம், அரச தாதியர் சங்கம், ஜனராய சுகாதார சேவை சிற்றூழியர் சங்கம், தொழில்நுட்ப வல்லுநர் சங்கம், மேற்பார்வையாளர் சங்கம், மருத்துவ ஆய்வுகூட சங்கம், தாதியர் சங்கம்,பல் வைத்தியர்கள் சங்கம் என அனைத்து சங்கங்களும் ஈடுபட்டிருந்தன.

இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத் தாக்குதல் சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிப்பதோடு இத்தாக்குதலில் ஈடுபட்டவர்களினையும் அதற்கு மூல காரணமானவர்களினையும் பொலிஸார் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமைக்குள் கைது செய்யா விட்டால் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப் புறக்கணிப்பால் வெளிநோயாளர் பிரிவு மற்றும் சில நோயாளர் விடுதிகளில் வைத்தியர்கள் எவரும் காணப்படாததனால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்ததோடு எக்ஸ் கதிர்ப் பிரிவு நோயாளர்களும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவு உட்பட பிரதான சிகிச்சைப் பிரிவுகள் அனைத்தும் எவ்வித தடங்கலுமின்றி வழமைபோல இயங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் சம்பவத்தை கண்டித்து மட்டக்களப்பு போதனா வதைத்தியசாலை வைத்தியர்களும் ஒரு மணிநேர அடையாள வேலைநிறுத்தத்தினை மேற்கொண்டனர்.

அத்துடன் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு சுகாதார அமைச்சில் இருந்து எதிர்வரும் 18 ஆம் திகதி அதிகாரிகள் வருகைதரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுன்றது.

இச்சம்பவத்தை யாழ். பிராந்திய அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கண்டித்து அறிக்கையும் வெளியிட்டுள்ளது. (அ-4-6)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Française de Jaffna இன்French மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.

வகுப்புக்கள் ;-- சனி, ஞாயிறுகளில்....
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (8642)

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P:0212228093
E.mail:alliancejaffna@yahoo.com

றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு

மேலதிக விபரங்களை நேரில் /தொலைபேசியினூடாக பெறலாம்

# அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 11 பேருக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்காக புத்தளம் விடுதியொன்றில் தங்கியிருந்த நிலையில் புத்தளம் பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்ட 11 பேரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் ஹேசான் த மெல் உத்தரவிட்டுள்ளார்.

கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக முகவர் ஒருவரின் உதவியுடன் குறித்த 11 பேரும் புத்தளம் விடுதியொன்றில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக புத்தளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அந்த விடுதியை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்த 11 பேரையும் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 9 பேர் மட்டக்களப்பு பிரதேசத்தையும் 2 பேர் முல்லைத்தீவுப் பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் அறவிடப்பட்டிருப்பதாகவும் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்த முகவர் அடையாளம் காணப்பட்டதுடன் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் மாலை புத்தளம் மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-2)

வாழ்க்கை சிலருக்கு நாடகமாகத் தோன்று கின்றது. நாடகம் சிலருக்கு வாழ்க்கையாக தோன்றுகின்றது. ~ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தேவலோகத்துத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை பார்வை யிட்ட தேவலோகத் தூதுக்குழு, வேம்படி மகளிர் கல்லூரிப் பக்கமாக செல்கின்றது.

அங்கே மாணவிகள் கூடி நிற்கின்றனர். ஏதோ சிக்கல் போல் இருக்கின்றது என்று நினைத்த தூதுக்குழுவினர், வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாறுவேடத்தில் செல்கின்றனர்.

கல்லூரி வாசலுக்கு முன்பாக நிற்கின்ற பெற் றோர்களைப் பார்த்து இங்கு என்ன நடக்கிறது என்று கேட்க,

அதிபர் நியமன விவகாரமாம் என்று பெற் றோர் மெதுவாகக் கூற, அட! யாழ்ப்பாணத்தில் இது சர்வசாதாரண விடயமென்று கூறியபடியே தூதுக்குழுவினர் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பக்கமாக வருகின்றனர்.

அடங்கேப்பா! இந்தப் பெரிய உயர்ந்த கட்டிடம் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு.

தேவர்:- யார் இதைக் கட்டிக்கொடுக்கிறார்கள்?

ஒருவர்: யப்பான் நாட்டு அரசுதான் இந்தக் கட்டிடத்தை கட்டிக் கொடுக்கிறது சுவாமி.

தேவர்:- ஓ! அகாஷி தமிழர்களுக்குச் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தமாக இந்தக் கட்டி டத்தை யப்பான் அரசு கட்டிக் கொடுக்கிறதோ? எதுவாயினும் நல்லவேலை நோயாளர்கள் சுகமடையட்டும்.

ஒருவர்: சுவாமி! ஒரு சிக்கல். யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மருத்துவர் களிடை யே மூன்று பிரிவு.

தேவர்:- அதென்ன மூன்று பிரிவு? வழமையில் வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைப் பிரிவு, இயன் சிகிச்சைப்பிரிவு, எக்ஸ்றேப் பிரிவு என்றுதான் பிரிவுகள் இருக்கும். ஆனால் இங்கு மருத்துவர்களுக்கிடையே மூன்று பிரிவா? அதென்ன பிரிவுகள்?

ஒருவர்: மருத்துவர் சங்கம் சார்ந்த பிரிவினர், சங்கத்திற்கு எதிரான பிரிவினர், அந்தப் பக்க மும் இல்லை; இந்தப் பக்கமும் இல்லை எங்கள் கடமையை ஒழுங்காகச் செய்வோம் என்ற உயர் ந்த எண்ணம் கொண்ட பிரிவினர். இது தான் மூன்று பிரிவு.

தேவர்:- யாழ்ப்பாணத்தை இறைவன் படைக்கும்போதே பிரிந்து வாழக்கடவீர் என்று படைத்துவிட்டாரோ என்னவோ! இப்படிக்கூறிய படி யாழ் நகரை சுற்றிப்பார்க்கின்றனர். சில பழைய கட்டிடங்களில் மக்கள் கூடி நிற்கின்றனர். இது பற்றி அறிய விரும்பியவர்கள், அந்த இடத் திற்குச் செல்கின்றனர். அவை தனியார் மருத் துவ ஆலோசனை நிலையங்கள்.

ஒருவர்: சுவாமி! யாழ்ப்பாணத்தில் எதுஎது பழைய கட்டிடங்களோ அங்குதான் தனியார் மருத்துவ ஆலோசனை நிலையங்கள் இயங்கும். எவ்வளவுக்குக் குறைந்த சம்பளத்தில் யாரை வேலைக்கமர்த்த முடியுமோ அவர்களைத்தான் அங்கு பணிக்கு வைத்திருப்பார்கள்.

தேவர்:- அடக் கடவுளே! இது பற்றி கவனிக்க யாருமே இல்லையா? இப்படிக்கூறும்வேளை,

யாழ்ப்பாணத்தில் டாக்டர் ஒருவரின் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. உடனடியாக தேவலோகம் திரும்புங்கள்.

யாழ். மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் 'நடு நிலைமை' பற்றி ஆராய வேண்டுமென அவசர அழைப்புவர, தூதுக்குழுவினர் உடனடியாகத் தேவலோகம் திரும்பினர்.

## மடுமாதா உற்சவம் 23ஆம் திகதி ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மடு மாதா ஆலயத்தின் ஆடிமாத உற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக மடுத்திருத்தலத் தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ். எமி லியான்ஸ்பிள்ளை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள இத் திருவிழா தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருநாள் திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் ஏனைய மறைமாவட்ட ஆயர்கள் இணை ந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுப் பார்கள் என மடுத்திருத்தலத்தின் பரிபா லகர் அருட்தந்தை தெரிவித்துள் ளார். (அ)

## மனிதக் குருதிக்கு மாற்றீடு மனிதக் குருதியே

இரத்ததானம் பயனுடையது

குருதி வழங்குநரின்

- உடலின் நிறை, குருதிச்செறிவு அறியப்படுகின்றது.
- உடல் நிலை (நாடித்துடிப்பு, குருதி அமுக்கம்) சோதிக்கப்படுகிறது.
- குருதி வகை அறியப்படுகின்றது
- குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்க ளின் குருதித் தேவைக்கு உதவ முடிகின் றது.
- வைத்தியசாலையுடனான உறவு நெருக்கமாகின்றது.
- ஆத்மதிருப்தி ஏற்படுகின்றது.
- குடும்ப, சமூகப் பொறுப்புணர்வு அதிகரிக்கின்றது.



GIVE BLOOD SAVE LIFE

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா
காலம்: 2012, ஜூன் 16, சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 3063

## குடிக்கத் தண்ணீர் தருவீரோ? பூநகரிப்பகுதியின் அவலக்குரல்

பூநகரிப் பிரதேசத்தில் குடிநீர் விநி யோகம் கடந்த மூன்று நாட்களாக இடம் பெறாமையால் நீருக்காக மக்கள் போராட வேண்டிய அவல நிலை காணப்படுகின் றது.

நீர் விநியோகத்தினை மேற்கொள் ளும் பிரதேச சைபயினர் கடந்த மூன்று தினங்களாக நீர் விநியோகத்தை மேற் கொள்ளவில்லை. இதனால் 850 இற் கும் மேற்பட்ட பாடசாலை மாணவர் கள், பூநகரி வைத்தியசாலைப் பகுதியி னர், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

குடிநீர் வசதியில்லாமையால் பாட சாலைகளில் சமைத்து வழங்கப்படும் மதிய உணவும் வழங்கப்படவில்லை. பாடசாலைகளில் கல்வி கற்கும் வறு மைக்கோட்டிற்கு கீழ்ப்பட்ட மாணவர் களுக்கு குடிநீரும் இல்லை. மதிய உணவும் இல்லாத அவல நிலை காண ப்படுகின்றது.

மேலும் வைத்தியசாலையிலு ள்ள நோயாளர்களும் குடிப்பதற்கு தண்ணீர் இன்மையால் பெரும் சிர மத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் பிரதேச சபையினர் குடிநீர் வழங்கும் பவுசரும் உழவு இயந்திரமும் பழுதடைந்து விட்டதாக தெரிவிக்கின்றனர்.

போரின் பிடியில் சிக்கித் தவித்து எல்லாவற்றையும் இழந்த மக்கள் போர் முடிவடைந்து மூன்று ஆண்டு கள் கடந்த நிலையில் குடி தண்ணீ ருக்காக ஏங்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் எடுத்து தமது குடிநீர்ப் பிரச் சினையை தீர்த்து வைக்குமாறு மக் கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-7-84)

## கார் மோதியதில் எட்டு மாத குழந்தை பலி

(கொழும்பு)

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு முன்பாகவுள்ள ஜம் பட்டா வீதியில் நேற்று வியாழக்கிழமை காலை காரொன்று கூடாரமொன்றுடன் மோதியதில் 8 மாத குழந்தையொன்று பலியானதுடன் 7 பேர் காயமடைந்துள் ளனர்.

கொச்சிக்கடை திருவிழாவுக்காக அமைக்கப்பட்ட கூடாரத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸ் பேச் சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள் ளார்.

கூடாரத்துடன் மோதிய இக்காரின் சாரதி காரை விட்டு தப்பிச் சென்றுள் ளதாகவும் அவர் கூறினார்.

இவ் விபத் தில் காயமடைந்தவர்கள் கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)



## வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

ஒன்றை அடையவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டால் அதனை எப் படியாவது அடைய விரும்புவதே மனித குணமாகும். அந்த ஆசையை நிறைவேற்ற எதையும் செய்யத்துணி வர். நல்லதை அடைய ஆசைப்ப டுவதில் தவறில்லை. பக்தி நிலையில் இறைவன் திருவடியைச் சேரவேண் டும் என ஆசைப்பட்ட மெய்யடியார் பலருளர். அவர்களில் மணிவாசகர் தனித்துவமானவர். அவரை இறை வன் வலிய வந்து குருவடிவாகக் குரு ந்த மரநிழலிலே ஆட்கொண்டான். அந்த நிலையை மணிவாசகர் மனித வாழ் வியல் நிலையால் மறந்து செயற் பட்டபோது துன்பப்படுகிறார். மீண்டும் இறைவனைக் காண்பதற்கு ஆசைப் படுகின்றார். அதற்காகப் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொள்கிறார். அவ ருடைய மனம் ஆற்றாமையால் பெருந் துன்பத்தை எதிர்கொள்கிறது.

இத்துன்பம் தீரப்புதிய வழிபாட்டு நெறியிலே ஈடுபடுகின்றார். பாடல் களைப் பாடி இறைவனிடம் வேண்டு தல் செய்கிறார். அவ்வாறு அவர் பாடிய பாடல்களில் **திருச்சதகம்** என்னும் தொகுப்பு நிலையான பாடல்கள் அவரு டைய மனநிலையைத் தெளிவாக விளக் குகின்றன. இறைவனை விளித்துத் தன்னுடைய நிலையைக்கூறும் கூற்று நிலைப் பாடல்களாக அப்பாடல்கள் அமைந்துள்ளன.

எங்கள் தலைவனே!நான் நின்னை அடைந்து ஒன்றுவது எப்போது? என் பதே அவருடைய கேள்வியாக உள் ளது. தன்னுடைய செயற்பாட்டால் இறைவனின் அன்புத் தொடர்பை இழ் ந்ததையுணர்ந்து தன்னை **வஞ்ச னேன்** எனக் குறிப்பிட்டுப் பாடியுள் ளார். **எனக்கு உய்தி என நான் கருது வது உன்னிடம் சேருவது மட்டுமே. இதைவிடப் பிறிதொரு பொருள் இல்லை. இதை நினைக்கும் போது நான் அடையும் துன்பம் பெரிதாக உள்ளது** என்கிறார். இவ்விடத்துத்தன் துன்பத்தைப் **பைதல்** எனக்குறிப்பிடுகி றார். பைதல் என்பது சிறப்பான ஒரு வரால், அவர் நினைவால் ஏற்படும் துன்பம். குறிப்பிட்ட அவரால் மட்டுமே அத்துன்பம் தீரும். **எனவே இறைவா நீயே என்னிடம் இரக்கம் கொண்டு என் தீராத துன்பம் தீர அருள் செய்ய வேண்டும். முத்திச் செல்வத்தை அரு ளும் ஈசனே நீயே எனக்கு அருள் செய்யவேண்டும்** எனப் பாடுகிறார்.

இறைவனுடைய திருவருட்காட்சியை மீளவும் காணவே மணிவாசகர் ஆசைப் படுகிறார். அவருடைய இந்த ஆசையை இறைவனைத்தவிர வேறு யாராலும் நிறைவேற்றமுடியாது. இத் தகைய துன்பத்தை அனுபவிப்பதால்தன்னைப் பாவி எனக் குறிப்பிடுகிறார். தனக்கு மீண்டும் திருக்காட்சியை இறைவன் ஈய வேண்டும் என்பதே அவருடைய வேண் டுதலாக உள்ளது. ஈதல் என்பது உயர்ந் தவர் தாழ்ந்தவருக்குக் கொடுப்பதா கும். கொடை என்பது பிரதி உபகார மாகச் செய்யப்படுவது. இது மனித நிலை யில் நடைபெறும். ஈதல், பிரதி உபகார மாக அன்றி அருள்நிலை யில் செய்யப் படுவதாகும். இறைவன் அருள் அப் படிப்பட்டது. இறைவன் திருவடியை நாம டைய இறையருள் தேவை. உயிர்களு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

க்கு உறுதியளிக்கும் தன்மை இறை வனிடம் மட்டுமேயுண்டு. வேறெந் தப் பொருளாலும் இது நடைபெறாது. பழ வினை தீர்ப்பது ஐயாறன் அடித் தலமே என அப்பரும் பாடியுள்ளார்.

இறை , உயிர், உலகு என்னும் முப் பொருட்களுள் இறைவனே உயிர்க ளுக்கு உய்தி அருள்பவன் என்பதை மணிவாசகர் தன் வாழ்வியலில் அறிந் தவர். அதனை எல்லோரும் உணரப் பாடலிலே பதிவு செய்துள்ளார்.

எய்தலாவ தென்று நின்னை யெம்பி ரானிவ் வஞ்சனேற்

குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்மையின்

பைதலாவ தென்று பாதுகாத்திர ங்கு பாவியேற்

கீதலாது நின்கண் ஒன்றும் வண் ணம் இல்லை யீசனே

# சிக்கலில் சோயிப் மாலிக்



இந்தியாவில் நடக்கும் உள்ளூர்ப் போட்டிகளில் வெளிநாட்டு வீரர்கள் பங்கேற்கக்கூடாது. இதனை மீறி டில்லி கிளப் அணிக்காக பாகிஸ்தான் வீரர் சோயிப் மாலிக் விளையாடியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மும்பை பயங்கிரவாதத் தாக்குதலுக்குப் பின்பு இந்தியா, பாகிஸ்தான் இடையே கிரிக்கெட் உறவு பாதிக்கப்பட்டது. ஐ.பி.எல் தொடரிலும் பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதனிடையே, கடந்த 5 ஆம் திகதி பாகிஸ்தான் வீரரும் இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியாவின் கணவருமான சோயிப் மாலிக், லாலா ரகுபிர் டிராபி தொடரில், ஹர்கோபல் சி.சி என்ற டில்லி கிளப் அணிக்காக 40 ஒவர் போட் டியில் விளையாடி 26 ஓட்டங்கள் எடுத்தார்.

மாலிக் வருவதை டில்லி கிரிக்கெட் சங்கம் யாரிடமும் தெரிவிக்காமல் இரகசியமாக .வைத்துள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைப்படி உள்ளூர்ப் போட்டிகளில் வெளிநாட்டு வீரர்கள் பங்கேற்கக்கூடாது. இந்நிலையில் மாலிக், டில்லி கிளப் அணிக்காக விளையாடியது பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து பி.பி.சி.ஐக்கு எதுவும் தெரியாது.பெயர் குறிப்பிட விரும்பாத பி.பி.சி.ஐ மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், எங்கள் விதி ஏற்கனவே தெளிவாக உள்ளது. பாகிஸ்தான் வீரர் சோயிப் மாலிக் விளையாடப்போவது பற்றி எவ்வித முன் தகவலும் எமக்கு வழங்கப்படவில்லை.

உள்ளூர்ப் போட்டிகளில் பங்கேற்க அந்நிய வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளாக இந்தத் தடை உள்ள நிலையில் இந்தியா வந்து சோயிப் மாலிக் விளையாடியது எப்படி என்ற கேள்வி எழுந்துள்ளது.

# தடை மீண்டார் மலிங்க



உலகளாவிய ரீதியில் அதுவும் ஐ.பி.எல் போட்டிகளில் பிரசித்தமாக பேசப்படம் இலங்கை கிரிக்கெட் வீரர் லசித் மலிங்கவை கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தடை செய்யும் முனைப்பு மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் விளை யாடுவதற்குரிய உடன்படிக்கையில் ,லசித் மலிங்க கைச்சாத்திட வில்லை.

இந்நிலையில் நாட்டுக்கு இணங்கிச் செல்லாத வீரர்களை தடை செய்யும் சட்டமூலம் ஒன்று குறித்து இலங்கை அரசாங்கம் ஆலோசித்து வருவத்தை அடுத்தே இந்த செய்தி வெளியாகியிருந்தது.

இலங்கையில் கிரிக்கெட் வீரர்களின் ஊதியம் வருடா வருடம் 10 வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும். எனினும் ஏற்கனவே இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு ஊதியத்தில் நிலுவையும் உள்ளது. அத்துடன் எதிர்வரும் வருடத்துக்கான உடன் படிக்கையில் 10வீத ஊதிய உயர்வும் வழங் கப்படவில்லை.

இதனையடுத்தே உடன்படிக்கையில் கைச்சாத்திடப்போவ தில்லை என்று மலிங்க மறுத்திருந்தார்.எனினும் மலிங்க கிரிக்கெட்டில் இருந்து தடை செய்யப்படுவார் என்ற செய்தியை இலங்கை கிரிக்கெட் மறுத்துள்ளது.

Sports Page



பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் டுபாய் Zayed பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற நட்பு ரீதியான காற்பந்து போட்டியில் 2-1 என்ற ரீதியில் டுபாய் Zayed பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது. இரு அணி வீரர்களையும் படத்தில் காணலாம்.

# யூரோ: காலிறுதியில் ஜேர்மனி வெளியேறியது நெதர்லாந்து



(கார்கிவ்)

யூரோ கால்பந்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்த ஆட்டத்தில் ஜேர்மனி-நெதர்லாந்து அணிகள் மோதின.

ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் மரியோ கோமஸ் அசத்தலாக கோல் அடித்தார்.

இதற்கு பதில் கோல் அடிக்க நெதர்லாந்து அணி எவ்வளவு முயன்றும் முடியவில்லை. 38ஆவது நிமிடத்தில் ஜேர்மனி 2 ஆவது கோலை அடித்தது. இந்தக் கோலையும் மரியோ கோமஸே அடித்தார்.

முதல் பாதியில் ஜேர்மனி 2:0 என முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் இரண்டாவது பாதி ஆரம்பமாகி 73ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து அணி தனது முதல் கோலை அடித்தது. அந்த அணியின் றொபின் வன் பேர்சி தனக்கு கிடைத்த வாய்ப்பை கோலாக மாற்றினார்.

அதன்பின்னர் ஜேர்மனிய வீரர்களின் தடுப்பு ஆட்டத்தினால் எவ்வளவோ போராடியும் நெதர்லாந்து வீரர்களால் கோல் அடிக்க முடியவில்லை.

முடிவில் ஜேர்மனி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

ஏற்கெனவே தனது முதல் ஆட்டத்தில் டென்மார்க்கிடம் தோற்ற நெதர்லாந்து அணி, முதல் அணியாக தொடரில் இருந்து வெளியேறுகிறது.

தான் ஆடிய இரு ஆட்டங்களிலும் வென்றுள்ள ஜேர்மனி அணி 'பி' பிரிவில் தொடர்ந்து முதலிடம் வகிக்கின்றது.

# ஐ.பி.எல். போட்டிக்கு சலுகை கிடையாது!

சர்வதேச கிரிக்கெட் அட்டவணையில், ஐ.பி.எல். இருபது-20 போட்டித் தொடருக்கு சிறப்பு சலுகை வழங்க முடியாது என்று ஐ.சி.சி அறிவித்துள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக் இருபது-20 போட்டித் தொடரை இந்திய கிரிக்கெட் சபை ஆண்டுதோறும் நடத்தி வருகின்றது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கின்றனர். இந்த தொடர் 2 மாத காலம் நடப்பதால், வெளிநாட்டு வீரர்கள் தங்கள் தேசிய அணி விளையாடும் போட்டிகளில் பங்கேற்பதற்காக பாதியில் திரும்ப நேரிடுகிறது.

சில வீரர்கள் பணம்தான் முக்கியம் என்று தேசிய அணிக்காக விளையாடாமல் ஐ.பி.எல். போட்டியில் மட்டுமே கவனம் செலுத்தவும் நினைக்கின்றார்கள். இதை தவிர்ப்பதற்காக, ஐ.பி.எல் போட்டி நடக்கும் சமயத்தில் வேறு எந்த நாட்டிலும் கிரிக்கெட் போட்டி நடக்காமல் இருக்கும் வகையில் சர்வதேச கிரிக்கெட் அட்டவணை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகின்றது.

இந்த நிலையில், ஐ.சி.சி தலைமை செயலதிகாரி ஹாரூன் லார்கட் இது குறித்து நேற்று முன்தினம் கூறியதாவது;




ஐ.பி.எல் போட்டிக்கு மட்டும் சிறப்பு சலுகை வழங்குவது மிகவும் அபாயகரமான முன்னுதாரணமாக அமைந்துவிடும். தனியார் போட்டிக்கு அப்படி சலுகை வழங்க வாய்ப்பே இல்லை. அப்படி செய்தால், அவுஸ்ரேலியாவில் பிக் பாஷ் இருபது-20, இலங்கை, பங்களாதேஷ் நாடுகளில் நடக்கும் உள்ளூர் இருபது-20 போட்டிகள் என்று எல்லா போட்டிக்கும் சலுகை வழங்க வேண்டியிருக்கும். இவ்வாறு ஹாரூன் லார்கட் கூறியுள்ளார். அத்துடன் அடுத்த ஆண்டும் ஐ.பி.எல் போட்டியின்போது நியூசிலாந்து- இங்கிலாந்து அணிகளிடையே டெஸ்ட் தொடர் நடக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொடி பிடிக்கிறார் ஷரபோவா

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உள்ள ரஷ்ய அணிக்கு, பிரபல டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா தலைமை வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப விழா அணிவகுப்பு நிகழ்சியில் ரஷ்ய தேசியக் கொடியை ஏந்தி அணியை வழிநடத்தும் கௌரவம் ஷரபோவாவுக்கு கிடைத்துள்ளது.

சுவிட்சர்லாந்து அணிக்கு ரோஜர் பெடரர், ஸ்பெயின் அணிக்கு ரபேல் நடால் தலைமை வகிக்க உள்ள நிலையில், ரஷ்ய அணிக்கு ஷரபோவா தலைமையேற்பது டென்னிஸ் விளையாட்டின் புகழ் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதைக் காட்டுவதாக ரஷ்ய டென்னிஸ் சங்கத் தலைவர் ஷமிள் டார்பிஸ்சேவ் கூறியுள்ளார்.



ரஷ்யாவில் பிறந்த ஷரபோவா தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தாலும், ரஷ்ய ரசிகர்கள் அவர் மீது மிகுந்த அபிமானம் வைத்துள்ளனர் என்றும் டார்பிஸ்சேவ் தெரிவித்தார்.

# அதைவிட இதை அதிகம் பார்த்தனர்

5-வது ஐ.பி.எல் இருபது-20 கிரிக்கெட் தொடர் மிகப்பெரிய வெற்றியை பெற்றது.

இந்தப் போட்டியை தொலைக்காட்சியில் 255 கோடி பேர் பார்த்துள்ளனர். இது கடந்த ஆண்டு நடந்த உலகக்கிண்ண போட்டிகளை விட அதிகமானது என இந்திய கிரிக்கெட் சபையின் துணைத் தலைவரும், ஐ.பி.எல் அமைப்பின் தலைவருமான ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகக் கிண்ண போட்டிகளை விட ஐ.பி.எல் போட்டிகளைத்தான் அதிகமான பேர் தொலைக்காட்சியில் பார்த்துள்ளனர்.

உலகக்கிண்ண கால்பந்து மற்றும் அதற்கு அடுத்து உள்ள மிகப்பெரிய போட்டிக்கு அருகில் ஐ.பி.எல் போட்டியை பார்த்தவர்களின் எண்ணிக்கை இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

இந்திய பார்வையாளர்களை மட்டுமே நான் சொல்கின்றேன். இணையத்தளத்தில் பார்த்தவர்களின் எண்ணிக்கை 55 சதவீதம் அதிகரித்து உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐ.பி.எல் தலைவரான ராஜீவ் சுக்லா மத்திய அமைச்சராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடாலின் ரூ.5 கோடி கடிகாரம் மீட்பு



பிரபல டென்னிஸ் வீரர் ரபேல் நடாலுக்கு சொந்தமான ரூ.5கோடி மதிப்பிலான கைக்கடிகாரத்தை பொலிஸார் மீட்டுக்கொடுத்தனர்.

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் வீரரான நடால், பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். இந்நிலையில், நடால் தனது அறையில் வைத்திருந்த ரூ.5 கோடி மதிப்பிலான கைக்கடிகாரம் காணாமல் போனது.

இதையடுத்து கைக்கடிகாரத்தை திருடியது அந்த ஹோட்டலில் வேலை பார்த்த ஊழியர் என்பதைக் கண்டுபிடித்த பொலிஸார் அவரைக் கைது செய்து அவரது வீட்டில் மறைத்து வைத்திருந்த கைக்கடிகாரத்தையும் மீட்டனர்.

இது குறித்து நடால் கூறுகையில், பிரான்ஸ் பொலிஸார் சிறப்பாக செயல்பட்டு கைக்கடிகாரத்தைக் கண்டுபிடித்துள்ளனர். அதற்காக அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் இந்த சம்பவத்திற்கு நான் தங்கியிருந்த ஹோட்டில் மீது குற்றம் சுமத்த விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.


## நகராட்சிமன்றம் பருத்தித்துறை
## குத்தகை கேள்வி அறிவித்தல்

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆட்டிறைச்சிக் கடையை 01.07.2012 இலிருந்து 31.12.2012 வரையான காலப் பகுதிக்கு நடாத்துவதற்கான குத்தகை கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 26.06.2012 மு.ப. 10.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி : 26.06.2012 மு.ப. 11.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி : 26.06.2012 பி.ப. 14.00 மணி

| குத்தகை வகை | ஆகக் குறைந்த குத்தகைத் தொகை (வரிகள் நீங்கலாக) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT உட்பட) |
|---|---|---|---|
| 01. ஆட்டிறைச்சிக்கடை | 21750.00 | 1500.00 | 570.00 |

மேலதிக தகவல்களை நகராட்சிமன்றத்தில் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. சபா. ரவீந்திரன் (J.P.U.M)
தவிசாளர்,
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.
14.06.2012

(C-268)


# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதானவர் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் பளைப் பிரதேசத்தை 1999ஆம் ஆண்டு காலப் பகுதியில் கைப்பற்றுவதற்கு, இலங்கை இராணுவத்திற்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதான நபர் யாழ்.மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு தண்ணீரூற்றினைச் சேர்ந்த செய்யது முஹம்மது முத்து ராசா மொஹமட் லியூபின் (வயது 32) என்பரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் 2007-ம் ஆண்டு கொழும்பில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பூசா முகாமில் 2 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு கடந்த மாதம் 05 ஆம் திகதி மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த நபரினால் வழங்கப்பட்டதாக கூறி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம், குறித்த நபரினை கட்டாயப்படுத்தியே பெறப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டு நிராகரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக குறித்த வழக்கு நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று மீண்டும் அவ் வழக்கு மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த நபருக்கு எதிராக வேறு குற்றச்சான்றுகள் காணப்படாததனால் அவர் குறித்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

குறித்த நபர் சார்பில் சட்டத்தரணி எம்.றெமீடியஸ் மன்றில் ஆஜராகி இருந்தார்.

மேலும் குறித்த நபருக்கு எதிராக அனுராதபுரம், கொழும்பு மேல் நீதிமன்றங்களிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு நடைபெற்றுக் கொண்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# கைக்குண்டுகள் மட்டு.வில் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டதாக கருதப்படும் 3 கைக் குண்டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஆயித்தியமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெல்லூரில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் பெண்ணொருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அவரின் காணியில் இருந்து இந்தக் கைக்குண்டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இக் கைக்குண்டுகளை, குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் உதவியுடன் செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# அரசாங்கத்துக்கு எதி...

வும் சரத் பொன்சேகா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்றுக் காலை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்தினார். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் சரத் பொன்சேகா நடத்திய பகிரங்க ஊடகச் சந்திப்பு இதுவாகும்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது, தனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள், இலக்குகள், நோக்கங்கள் ஆகியவை குறித்து அவர் தெளிவுபடுத்தினார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

நடைமுறையில் உள்ள அரசுக்கு எதிராக போராடுவதற்கு அனைத்து எதிர்க் கட்சிகளையும் முன்வருமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குதல், 13-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்தல், வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்களே எமது முதல் கட்ட அரசியல் இலக்குகளாகவுள்ளன.

எனது உயிருக்கு இன்று பாரிய அச்சுறுத்தல் உள்ளது. சட்டமா அதிபர் கூட இந்த விடயத்தை உணர்ந்து எனது பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நான் முறைகேடான வகையில் நிதியைப் பயன்படுத்தினேன் எனக் கூறப்படுகின்றது. அவ்வாறான குற்றச்சாட்டுக்களை நான் அடியோடு நிராகரிக்கின்றேன்.

விளம்பரங்களைச் செய்வதற்கே நான் அதிகளவு நிதியைப் பயன்படுத்தினேனே தவிர, எனது தனிப்பட்ட தேவைக்கு எதனையும் எடுக்கவில்லை.

நான் ஒரு போதும் அரசுடன் இணைந்து செயற்பட மாட்டேன். எனது அரசியல் பயணத்தில் இணையுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார். (எ-11)

# மன்னார்...

தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு சிறப்பு உலங்கு வானூர்தி மூலம் மன்னாருக்குச் சென்ற அமெரிக்கத் தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிகள், மதிய போசனத்துடன் மாலை 3.30 வரை ஆயர் இல்லத்தில் சந்திப்பில் ஈடுபட்டிருந்தனர் என தெரிய வருகிறது.

இச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக அறிய முடிகிறது. (எ-11)

# மீள்குடியேற்றம் தாமதமாகு...

வடக்கே போரினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னர் கூறப்பட்ட யூன் 30 -ம் திகதி என்ற கால எல்லைக்குள் பூர்த்தியாக முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற துணை அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கின்றபோதிலும் அவற்றை பூர்த்தி செய்ய மேலும் சிறிது காலம் தேவைப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கண்ணி வெடிகள் முழுமை[...] அகற்றப்படாத காரணத்தினாலும் இரா[...] முகாம்களுக்காக இடங்கள் எடுக்கப்பட[...] சத்தில் அதற்குப் பதிலாக வேறு இடங்[...] அடையாளம் கண்டு மக்களை அங்கு குடி[...] வேண்டியுள்ளதாலும் இந்த சிறிய தாமத[...] படுவதாக அமைச்சர் கூறினார். இருந்தபோ[...] அதற்கு பல மாதகாலம் பிடிக்கும் என்[...] படுவது தவறு என்றும் அவர் குறிப்பிட்[...]

# ஐக்கிய தேசியக் கட...

ரங்கே பண்டாரவின் கட்சி ஐ.தே.க. ஆகும். அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார். எனவே அவர் கட்சி நிலைப்பாட்டிற்கு அமைய நடந்துகொள்ள வேண்டும்.

முன்னாள் இராணுவத் தளபதியுடன் தனிப்பட்ட உறவுகளை வைத்திருப்பதில் எமக்கு ஆட்சேபனை இல்லை என ரங்கே பண்டாரவிடம் கூறியுள்ளேன். ஆனால் அதை ஐ.தே.கவின் கொள்கைகளுடன் கலக்கக்கூடாது என[...] கமகே தெரிவித்தார்.

சரத் பொன்சேகா நேற்று நடத்திய [...] யாளர் மாநாட்டில் ஐ.தே.க. நாடாளு[...] உறுப்பினர் பாலித தேவபெரும பங்கு[...] யமை குறித்து கேட்டபோது, இவ்விடய[...] தான் உடனடியாக ஆராயவுள்ளதாக [...] கமகே கூறினார். [...]

# நாடாளுமன்ற தெரிவு...

குழுவாகும். இதில் பங்குபற்றுவோம். பங்குபற்றமாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடிக்கடி மாறுபட்டக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றது.

இருப்பினும் அக்கட்சி உட்பட அனைத்துக் கட்சியினரையும் இந்தக்குழுவுக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. அனைத்துக் கட்சியினரையும் முதலில் இக் குழுவில் அமரச் செய்ய வேண்டும்.

அதன் பின்னரே நாம் அதில் என்ன [...] வேண்டும் என்பதை தீர்மானிப்போம். [...] காக குழுக்கூட்டத்தின்போது பேசுவதற்கு[...] வும் இல்லையென்று கூறவில்லை. 13ஆ[...] திருத்தச் சட்டம், பொலிஸ் மற்றும் காணி[...] காரகள் உள்ளிட்ட பல அம்சங்கள் தொட[...] அதன்போது பேசப்படும் என்று அமை[...] ஹெகலிய மேலும் கூறினார். [...]

# ஐ.நா. சபையுடன் இணை...

ஆயுதப் போராட்டங்களின்போது பொது மக்களைப் பாதுகாப்பது தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் சமர்ப்பித்த அறிக்கையிலேயே அவர் இது குறித்து குறிப்பிட்டுள்ளார்.

இவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் காத்திரமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

சுயாதீனமான விசாரணைகளின் மூலம் குற்றச்செயல்களுக்குப் பொறுப்புக்கூறுதல், பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைத்தல் போன்ற விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இவ் விவகாரங்களில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இலங்கை அரசாங்கம் இணைந்து செயற்பட வேண்டும் என பான் கீ மூன் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதி வழங்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரை பதில் அனுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஜனாதிபதி கலந்து...

பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன உள்ளிட்டோர் கலந்து கொண்ட போதிலும் ஜனாதிபதியோ, வெளிவிவகார அமைச்சரோ கலந்துகொள்ளவில்லை.

ஜனாதிபதி வெளிநாடு செல்லவுள்ளதால் அதற்கு தயாராகுகின்றார் என்றும் அதன் காரணமாக சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் லண்டன் விஜயம் வெற்றியளித்தது எனவும் அதுகுறித்து பிரசாரம் செய்ய ஊடகங்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் லலித் வீரதுங்க கூறியுள்ளார்.

லண்டனில் ஜனாதிபதி கலந்து கொள்ள விருந்த ஏழு நிகழ்வுகள் புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பால் ரத்துச் செய்யப்பட்டது[...] பதை லலித் வீரதுங்கவிடம் உறுதிப்ப[...] ஊடகவியலாளர்கள் பெரும்பாடுபட்டனர்[...]

பிரித்தானிய வர்த்தகர்களுடன் இ[...] பெற்ற பேச்சுவார்த்தையில் என்ன நட[...] என ஆங்கில பத்திரிகை ஒன்றின் பிரத[...] கேள்வி எழுப்ப அதனை அவர்களிடம் செ[...] தான் கேட்க வேண்டும் என ஜனாதிபதி[...] செயலாளர் பதிலளித்துள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் லண்[...] விஜயம் வெற்றி என ஊடகங்கள் கருத்[...] களை வெளியிட வேண்டும் என இங்கு ல[...] வீரதுங்க கேட்டுக்கொண்டதாகத் தெரிவிக்[...] படுகின்றது. (எ[...]

# ஆணைக்...

மகிந்தவிற்கும், பிரிட்டிஷ் பிரதமர் கமரூனுக்குமிடையிலான சந்திப்பு எதேச்சையாக நடைபெறவில்லை. அது திட்டமிடப்பட்டு நடந்த சந்திப்பு. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அமுலாக்கம், போருக்குப் பின்னரான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள், கண்ணி வெடிகளை அகற்றுதல் உட்பட்ட விடயங்கள் குறித்து பிரித்தானியப் பிரதமருக்கு விளக்கப்பட்டன.

சுமார் பத்து முதல் பதினைந்த நிமிடங்கள் வரை இந்தப் பேச்சு நடைபெற்றது. புலம் பெயர் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினாலும் ஜனாதிபதியின் விஜயம் வெற்றிகரமாக அமைந்தது.

இவ்வாறு பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் டாக்டர் கிறிஸ் நோனிஸ் தெரிவித்தார். (எ-11)

# நில அபகரிப்புக்கு எதி...

தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபடைந்து மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், வடக்குக் கிழக்கில் இயல்புநிலை உருவாகியுள்ளதாகவும் இராணுவத்தின் எண்ணிக்கையை படிப்படியாக குறைத்து வருவதாகவும் கூறி சர்வதேச சமூகத்தினை ஏமாற்றிவரும் அரசானது மறுபுறத்தில் இராணுவத் தேவைக்காக என தமிழர் தாயகத்தில் உள்ள தனியார் மற்றும் அரச காணிகளை கையகப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

அரசினது இந்த இராணுவ மயப்படுத்தும் வேலைத்திட்டங்கள் அதாவது, தமிழ்த் தேசத்தை இல்லாமல் செய்வதனூடாக தமிழர்களது மண்ணை முழுமையாக சிங்களமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் முக்கிய அங்கமாகவே இந்த இராணுவமயமாக்கம் வேலைத்திட்டமும் அமைந்துள்ளது.

இந்த நிலப்பறிப்பு நடவடிக்கையானது அரசினால் இன்றுநேற்று ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக ஆரம்பகாலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலப்பறிப்பு மற்றும் சிங்கள மயமாக்கல் நடவடிக்கைகள் மூலம் அப்பிரதேசத்தின் குடித்தொகையின் விகிதாசாரத்தினை முற்றாக மாற்றியமைத்துள்ளனர்.

இச் செயற்பாடானது ஆங்கிலேயர்கள் தீவை விட்டு வெளியேறியதிலிருந்து தமிழ் இளைஞர்களது ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கும் வரை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது.

ஆயுதப் போராட்டம் தீவிரமடைய தொடங்கிய 1970களிலிருந்து 2009 மே மாதம் வரையான காலப் பகுதியில் இந்த நில ஆக்கிரமிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆயுதப் போராட்டம் 2009 மே மாதத்[...] முடிபுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் மீ[...] டும் சிங்களதேசம் முழுவீச்சோடு சிங்க[...] மயமாக்கல், பௌத்த மயமாக்கல், நிலப்பறி[...] நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

அதுமட்டுமன்றி ஜெனிவாத் தீர்மான[...] நிறைவேற்றப்பட்ட பின்னரும் அரசாங்க[...] தமிழ்த் தேசத்துக்கு எதிரான நடவடிக்[...] களில் எவ்வித தயக்கமும் இன்றி தீவிரப்படுத்[...] வருகின்றது எனின் அந்தத் தீர்மானத்தி[...] பலவீனங்களை நாம் நன்றாக விளங்கி[...] கொள்ள முடியும்.

இந்தவிடயங்கள் தொடர்பில் ஓர் விழிப்[...] ணர்வை ஏற்படுத்திக்கொள்ளவும், நிலப் பறி[...] பினை தடுத்து நிறுத்துவதற்காகவும் ஜனந[...] யக வழியிலான எதிர்ப்புப் போராட்டம் ஒன்றி[...] முன்னெடுப்பது என தமிழ்த் தேசிய மக்க[...] முன்னணி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை (18.06.201[...] நண்பகல் ஒரு மணி தொடக்கம் 2 ம[...] வரை யாழ்.நகர பேருந்து நிலையத்திற்[...] முன்பாகவுள்ள சோமசுந்தரப் புலவர் சி[...] அருகில் நடைபெறவுள்ள இப் போராட்டத்தி[...] அனைவரையும் கலந்து கொண்டு ஆதர[...] வழங்குமாறு வேண்டுகின்றோம் என தமிழ்[...] தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்[...] அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு[...] ளது. (எ-11)


A/L 2012 பரீட்சைக்கு தோற்றுவோரும் விண்ணப்பிக்கலாம்
CIMA UK | Engineering-USA | BIT Degree | Diploma Courses
5,000.Rs Per Level Discount | 13,200.Rs Per Module Discount | 19,200.Rs Discount Per Semester | 1,000.Rs Per Course Discount
Qualified Lectures panel, 12 Years Experience
கல்வியங்காட்டில்
மேலதிக விபரங்களுக்கு நேரில்
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243, Adiyapatham Road
Bus Route 750 / 751

இலவச அழகுக்கலைப் பயிற்சி
வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்
சுவீடன் நாட்டு ஒறிபிளேம் (Oriflame) நிறுவனம் 590/- பதிவுக் கட்டணத்துடன் அழகுக்கலைப் பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது. பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்களும் வீட்டில் இருந்தவாறே மேலதிக வருமானமாக ரூபா 12,000/- மேல் உழைப்பதற்கான வழிகாட்டலும் வழங்கப்படும்.
- வவுனியா, கிளிநொச்சி 17ம் திகதி ஆரம்பம்
- யாழ்ப்பாணம் 16ம், 21ம் திகதி ஆரம்பம்
(பளை, கொடிகாமம், சாவகச்சேரி, நெல்லியடி, வியாபாரிமூலை, கம்பர்மலை, மூளாய், சுதுமலை, சண்டிலிப்பாய், சுழிபுரம், சுன்னாகம்)
❖ நிபந்தனைக்கு உட்பட்டது.
தொடர்புகளுக்கு:- 0772288243/ 0214925152
(8639)

மணல் விற்பனைக்குண்டு
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 21,000/-
தொடர்புகளுக்கு
ரமேஸ்
0722694462
(8638)

வேலையாள் தேவை
யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் தாய் ஒருவரை பராமரிப்பதற்கு (Home Nurse) பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்பு:- 0770222232
(8644)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட[...]